# திருக்கோயில்

பிப்ரவரி 1991 விலை ரூ. 3





மேதகு பாரதப் பிரதமர் திருமிகு சந்திரசேகர் அவர்கள் அண்மையில் காஞ்சிபுரம் வருகை புரிந்தார்கள். நம் அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு வ. ராமதாஸ். ஐ.ஏ.எஸ். அவர்கள் மேதகு பாரதப் பிரதமர் அவர்களை வரவேற்றார்கள்.

முகப்பு:

பழநி

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி


# திருக்கோயில்


இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை — 600 034.
தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

| மாலை : 33 | திருவள்ளுவர் ஆண்டு 2022 பிரமோதூத ஆண்டு மாசி<br>பிப்ரவரி 1991 விலை ரூ. 3-00 | மணி 2 |
|---|---|---|


## திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர் களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

**உயர்திரு ஆணையர் அவர்கள்**
**இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை**
**சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

### சந்தா விவரம்

| | | | |
|---|---|---|---|
| அரை ஆண்டு | — | ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — | ரூ. | 36-00 |
| ஆயுள் | — | ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும். முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

**எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.**

## பொருளடக்கம்


குமரி மாவட்டக் கோயில்கள்.
—டாக்டர் எஸ்.பத்மநாபன்,

ஆடல் காணீரோ திருவிளையாடல் காணீரோ
—வே. தியாகராஜன்.

சித்திரபாரதம்.
—செவ்வேள்.

திருக்குட நீராட்டுவிழா கண்ட திருக்கழுக் குன்றம்.
—முதுபெரும்புலவர் வேதாசலம்.

தென்னிந்தியச் சிற்பக்கலையில் அர்த்தநாரி.
—டாக்டர் சோ.கோவிந்தராஜு.

பரம நாடகம் பற்றிப் பல்லோர் பரவசம்.
—நடராசன் அடிமை.

வைணவ ஆலயத்தில் சிவராத்திரிவிழா.
—எஸ்.பி.இராஜகுமாரி, பி.ஏ.பி.எல்.,

கந்தவேள் கருணை.
—டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்.

சோழநாட்டு வைணவத் திருத்தலங்கள்.
—நித்திலக்கோ.

விநாயகனே வெவ்வினையின் வேரறுக்க வல்லான்
—கோ. சண்முகம்.

பக்தி இலக்கியம்.
—பேராசிரியர் மது.ச.விமலானந்தம்.

காதலாகி ஓதுவீர்.
—சுதர்சனம்.

நூல் அறிமுகம்.
—நிறைமதி.

கம்பரின் இராமாவதாரம்.
—டாக்டர் த.அமிர்தலிங்கம்.

# குமரி மாவட்டத் திருக்கோவில்கள்

டாக்டர் எஸ். பத்மநாபன்
நாகர்கோவில்.

''பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் பாரத நாடு'' என்று பாடினார் பாரதியார். பின்னர் ''மக்கள் துங்கம் உயர்ந்து வளர்கென கோவில்கள் சூழ்ந்ததும் இந்நாடே'' என்று அதற்கு விளக்கமும் தருகிறார். இயற்கையன்னை ஆண்டுக்கொருமுறை பனிக்கட்டியால் சிவலிங்க உருவைப் படைக்கும் அமர்நாத் முதல் நீலத்திரைக்கடல் ஓரத்திலே நின்று நித்தம் தவம் செய்யும் குமரியம்மன் திருவடி வரை இறைவன் வழிபாட்டிற்காக எழுப்பப்பட்ட கோவில்கள் பாரத நாட்டைப் பெருமை படுத்துகின்றன. அந்த புண்ணிய பாரதத்தின் தென்கோடி கன்னியாகுமரி மாவட்டம். வேறு எந்த மாவட்டத்திற்கும் இல்லாத ஒரு தனிச் சிறப்பு இந்த குமரி மாவட்டத்திற்கு உண்டு. இது அன்னை பராசக்தியின் பெயரால்அமைந்த மாவட்டம். முக்கடல் சங்கமத்தில் மோனத் தவம் செய்து நிற்கும் குமரியம்மனின் பெயரால் அமைந்தது இந்த கன்னியாகுமரி மாவட்டம்.

இறைவனது சக்தியாம் தேவி, கன்னியாகுமரியில் குமரியம்மனாகவும், மண்டைக்காட்டில் பகவதியம்மனாகவும், கொல்லங்கோட்டில் காளியம்மனாகவும், முப்பந்தலில் இசக்கியம்மனாகவும், ஆரல்வாய்மொழியில் மீனாட்சி அம்மனாகவும், பூதப்பாண்டியில் சிவகாமி அம்மனாகவும், வடிவீஸ்வரத்தில் அழகம்மனாகவும், ஒழுகினசேரியில் புவனேஸ்வரி அம்மனாகவும், வடசேரியில் காமாட்சி அம்மனாகவும், பத்மநாபபுரத்தில் ஆனந்தவல்லி அம்மனாகவும், கூட்டாலுமூட்டில் பத்ரேஸ்வரி அம்மனாகவும் நின்று குமரி மாவட்டத்தைக் காவல் புரிகின்றாள் என்று கருதும்படி இங்கு தேவி ஆலயங்கள் அமைந்துள்ளன.

திருமலை, திக்குறிச்சி, திருப்பரப்பு, திருநந்திக்கரை, பொன்மலை, பன்னிப்பாகம் கல்குளம், மேலாங்கோடு, திருவிடைக்கோடு, திருவிதாங்கோடு, திருப்பன்றிக்கோடு, திருநட்டாலம் என்னும் பன்னிரண்டு சிவாலயங்களும் குமரி மாவட்டத்தைப் பெருமைப்படுத்துகின்றன. சிவராத்திரியன்று இங்குள்ள பக்தர்கள் சிவப்பு உடையணிந்து கையிலே விசிறி ஏந்தி ''கோவிந்தா, கோபாலா'' என்னும் திருமாலின் திருநாமத்தைக் கூறி பன்னிரண்டு சிவாலயங்களை நோக்கி ஓடுகின்றனர். இந்த அரிய நிகழ்ச்சியை வேறு எங்குமே நாம் காண முடியாது.

''நீலவண்ண நெடுமேனியன்'' இங்கு நின்று இருந்து கிடந்து நமக்குக் காட்சி தருகிறார். நின்ற கோலத்தாலே பறக்கை மதுசூதனர், இருந்த கோலத்தாலே திருவண் பரிசாரத்துத் திருவாழிமார்பர், கிடந்த கோலத்தாலே திருவட்டாறு ஆதிகேவசப்பெருமாள். நம்மாழ்வார் மங்களாசாசனம் செய்த திருப்பதிகள் குமரி மாவட்டத்திலே இரண்டு. ஒன்று திருவண்பரிசாரம் என்ற திருப்பதிசாரம், மற்றொன்று வட்டாறு என்னும் திருவட்டாறு.

குன்றுதோறும் இங்கே குமரக்கடவுள் குடியிருந்து நம்மைக்காத்து அருள்புரிகின்றார். மருங்கூர் மலையிலே சுப்பிரமணியர், தோவாளை மலையிலே பாலமுருகன், வெள்ளிமலையிலே குமரன், வேளிமலையிலே வள்ளி மணாளன். அந்த வேலவனின் அருள் பெற்ற அவ்வையாரின் அரிய திருக்கோவில்கள் குமரி மாவட்டத்திலே மூன்று. தாழக்குடி, குறத்தியறை, முப்பந்தல் ஆகிய மூன்று இடங்களிலும் அவ்வையார் கோயில் கொண்டு அருள் புரிகின்றார்.

மும்மூர்த்திக்காக அமைந்த ஒரே கோவிலான சுசீந்திரம் தாணுமாலையன் ஆலயம், சைவம், வைணவம், சமணம், பௌத்தம் என்னும் நான்கு இந்திய சமயங்களின் கூட்டுருவமாகக் காட்சி தரும் நாகர்கோவில் நாகராஜர் ஆலயம், தாடகையைக் கொன்ற பாவம் தீர ஸ்ரீராமபிரானால் எழுப்பப்பட்ட திருசரம் கோப்பு ராகவேஸ்வரர் கோவில், இராமாயணக் கதை முழுவதையும் மரப்பலகைகளில் செதுக்கி வைத்துள்ள பத்மநாபபுரம் இராமசாமி கோவில், கல்லிலே எழுப்பப்பட்டக் கலைக்கூடமான திருவட்டாறு ஆதிகேசவப் பெருமாள் ஆலயம், கல்லைக்குடைந்து அமைக்கப்பட்ட திருநந்திக்கரைக் குடைவரைக் கோவில், எழில் கொஞ்சும் அருவியின் அருகே அமைந்துள்ள திருப்பரப்பு மகாதேவர் ஆலயம் மான்மழுவுடன் சிவன், சங்கு சக்கரத்துடன் திருமால், சதுர்புஜங்களுடன் பராசக்தி மூவரும் ஒரே கருவறையில் இருந்து அருள்பாலிக்கும் கருங்கல் பகவதி கோவில், பதினான்கு அடி உயரத்தில் கண்ணன் திருவுருவைக் கொண்ட திப்பரமலை கிருஷ்ணன் கோவில், பாரதத் தாயின் பாதச் சிலம்பொலியென முக்கடலும் கூடி முழங்கும் கன்னியாகுமரியில் நின்று அருளும் குமரி அம்மனின் பேராலயம்-இந்த அழகுமிகு ஆலயங்கள் யாவும் அழியா வரம்


பெற்ற கலைச் செல்வங்களாக குமரி மாவட்டத்திலே காட்சி தருகின்றன.

குமரி மாவட்டத்தின் ஆன்மீகத் திருநகர் சுசீந்திரம். இந்த ஆலயத்தின் முன் கம்பீரமாக காட்சி தரும் 135 அடி உயரங்கொண்ட கோபுரம் திராவிடக் கட்டடக்கலை அமைப்பிற்கோர் எடுத்துக்காட்டு. கல்லிலே கலையழகினை காட்டி நிற்கும் பல மண்டபங்களைத் தன்னகத்தே கொண்டது சுசீந்திரம் தாணுமாலயர் ஆலயம். பதினெட்டு அடி உயரத்தில் கைகூப்பி வணங்கிய நிலையில் காட்சி தரும் அனுமானது சிலை, அழகிலும், கம்பீரத்திலும் பாரத நாட்டிலேயே சிறந்து விளங்குகின்றது. அந்த அனுமனின் அரிய சிலை ஒரே கல்லில் செதுக்கப்பட்டது. அதே போன்று ஒரே கல்லில் வடித்தெடுத்த இசைத்தூண்கள் பல்வேறு இசைக் கருவிகளின் நாதங்களை எழுப்பி எல்லோரையும் வியப்பில் ஆழ்த்துகின்றன. இந்த ஆலயத்தில் காணப்படும் திருமலை நாயக்கரின் கற்சிலையிலே மூக்குத்துளை சிரசு வரை செல்கிறது. காதிலுள்ள துவாரம் வழி செல்லும் கம்பி மறு காது வழியாகவும், நாசித் துவாரம் வழியாகவும் வரும்படி செதுக்கப்பட்டுள்ளது. இதைப் போன்று மிக நுண்ணிய வேலைப்பாடு கொண்ட சிற்பங்கள் பலவற்றை இங்கே நாம் கண்டு களிக்கலாம். சுசீந்திரம் ஆலயத்தில் பாண்டியர்களும், சோழர்களும் சேரர் வழிவந்த வேணாட்டு அரசர்களும், விஜய நகர நாயக்க மன்னர்களும், தங்கள் கைவண்ணங்களை அழகுறக் காட்டியுள்ளனர். இந்த ஆலயம் திராவிடக் கட்டடக்கலை அமைப்பில் சிறப்புடன் திகழ்கின்றது.

நாகர்கோவில் நகரத்தின் நடுவண் அமைந்துள்ளது நாகராஜர் ஆலயம். இக்கோவிலின் பெயரால் இந்நகர் அழைக்கப்படுவது ஒரு தனிச் சிறப்பாகும். இக்கோவிலில் மூலவர் நாகராஜர். மூலவருடன் சிவனும் திருமாலும் இங்கே கோவில் கொண்டு அருள்புரிகின்றனர். கோவில் தூண்களில் சமண சமய தீர்த்தங்கரர்களான பார்சுவநாதரும், மகாவீரரும் தவக் கோலத்திலே நின்றும், அமர்ந்தும் காட்சி தருகின்றனர். கோவிலின் தெற்குவாயில் புத்த விகாரத்தை நமக்கு நினைவூட்டுகின்றது. இவ்வாறு நாகர்கோவில் நாகராஜர் ஆலயம், சைவம், வைணவம், சமணம், பௌத்தம் என்னும் நான்கு சமயங்களில் கூட்டு உருவமாக நமக்குக் காட்சித் தருகின்றது.

திருவட்டாறு ஆதிகேசவபெருமாள் ஆலயத்தில் கல்லிலும் மரத்திலும் அமைக்கப்பட்ட பல கலைச் செல்வங்களைக் கண்டுகளிக்கலாம். மூலவரின் முன்னால் உள்ள ஒற்றைக்கல் மண்டபம் 18 அடி சதுரமும், மூன்று அடி உயரமும் கொண்ட ஒரே கல்லின் மேல் எழுப்பப்பட்டுள்ளது. இதை அக்காலத்திய பொறியியல் திறனுக்குச் சான்றாகக் கொள்ளலாம். பலிபீட மண்டபத்தில் இருபக்கமும் இலக்குவன், இந்திரஜித், வேணுகோபால், சக்தி, நடராஜர் இவர்களது உருவங்கள் அழகுற செதுக்கி வைக்கப்பட்டுள்ளன. நடராஜருடன் பிரம்மாவும், திருமாலும் பக்க வாத்தியங்கள் ஏந்தி நிற்பது காண வேண்டிய காட்சியாகும். இங்குள்ள ரதி மன்மதன் சிலைகள் மிகவும் கவர்ச்சியானவை. இவையாவும் தமிழ்நாட்டு சிற்பிகளின் கலைத் திறனைக் காட்டி நிற்கின்றன. ஒற்றைக்கல் மண்டபத்தின் முன்னால் அமைந்துள்ள உதய மார்த்தாண்ட மண்டபம் கேரள நாட்டுக் கலைத்திறனுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது. கலை நுட்பங்களுடன் கூடிய மரத்தூண்களைக் கொண்ட இம்மண்டபத்தில் விநாயகரின் திருமண ஊர்வலமும், பாற்கடலை கடையும் நிகழ்ச்சியும் மரத்திலே அழகாகச்செதுக்கப்பட்டுள்ளதைக் காணலாம். கருவறையின் கூரையில் மரத்தினால் செய்யப்பட்ட ஒரு சங்கிலி தொங்குகின்றது. உட்கோவிலின் மரக்கதவுகள் சிற்ப வேலைப்பாட்டின் சிகரங்களாகத் திகழ்கின்றன. திருவட்டாறு ஆலயத்திலே காணப்படும் கற்சிலைகள் தமிழ்நாட்டின் கலைத்திறனையும், மரவேலைப்பாடுகள் கேரள நாட்டின் கலைத்திறனையும் நினைவூட்டி நிற்கின்றன.

பத்மநாபபுரம் இராமசாமி கோவிலின் வெளிப்பிரகாரத்தில் இராமாயணக் கதை முழுவதும் நாற்பத்தி ஐந்து மரப்பலகைகளில் நாடக ரூபமாக சித்தரிக்கப்பட்டுள்ளது. இக்கலைக் கருவூலத்தை மர வேலைப்பாட்டில் பாரத நாட்டின் சிறந்த கலைச் சின்னங்களில் ஒன்றாகக் கருதலாம். இங்கு சித்தரிக்கப்பட்



**பலநதிகளும் சென்று**
**ஒருகடலையே சேர்வது போல்**
**பலசமயங்களும்**
**ஒரு பரம்பொருளையே போற்றி வழிபடுகின்றன.**

**—இராமகிருஷ்ண பரமஹம்சர்**

டுள்ள இராமாயண நிகழ்ச்சிகளில் கம்பராமாயணத் தாக்கத்தை நாம் காணலாம்.

கன்னியாகுமரியில் நீலத்திரை கடலோரத்தில் முக்கடல் சங்கமத்தில் முக்கண்ணனை நோக்கித் தவம் செய்து நிற்கிறாள் அன்னை பராசக்தி. கன்னியாகுமரி சக்தியின் இருப்பிடம். குமரிக் கடற்கரை மணலில் அணுக்குண்டு செய்வதற்குரிய ''தோரியம்'' என்னும் அரும் பொருள் காணப்படுவது கன்னியாகுமரி சக்தியின் இருப்பிடம் தான் என்பதை உறுதிப் படுத்துகின்றது. கன்னியாகுமரி ஆலயத்தில் நின்றருளும் தேவியின் முகப்பொலிவு காண்போர் உள்ளத்திற்கு அமைதி தந்து தெய்வீக உணர்வை ஊட்டும் தன்மை கொண்டது. சிற்பக்கலையின் சிறப்பெல்லாம் ஒன்று சேர தேவியின் திருவுருவச்சிலை செதுக்கப்பட்டுள்ளது. இத்திருவுருவை வடித்தெடுத்த கலைஞன் என்றுமே போற்றுதற்குரியவன்.

கொந்தளிக்கும் கடலின் நடுவே பாறையின் மேல் கம்பீரமாகக் காட்சி தருவது சுவாமி விவேகானந்தரின் நினைவாலயம். இருபதாம் நூற்றாண்டில் எழுந்த கலைக்கூடம் இது. இந்த ஆலயத்தின் முகப்பு அஜந்தா குகைக் கோயிலை நினைவூட்டுகின்றது. விமானம் பேலூர் இராமகிருஷ்ணர் ஆலயம் போன்று எழுப்பப்பட்டுள்ளது. பாறையிலே அமைந்துள்ள ஸ்ரீபாதமண்டபம் சோழர்களின் கட்டடக்கலை அமைப்பில் காட்சி தருகின்றது. இவ்வாறு வடநாட்டுக் கட்டடக்கலையும் தென்னாட்டுக் கட்டடக்கலையும் சுவாமி விவேகானந்தர் நினைவாலயத்தில் இணைந்து நிற்கின்றன. தமிழகத்துக் கலைஞர்களின் திறன் அன்றுபோல் இன்றும் சிறப்புடன் நிகழ்கின்றது என்பதை சுவாமி விவேகானந்தர் நினைவாலயம் நமக்கு பறைசாற்றி நிற்கின்றது. 133 அடி உயரத்தில் திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட இருப்பது இங்கு போற்றலுக்குரியது.

குமரி மாவட்டக் கோவில்களை ஒட்டி பல்வேறு கலைகள் வளர்ந்தன. வளர்க்கப்பட்டன. கோவில்களில் யஜுர் வேதம் இசையுடன் பாடப்பட்டதுஎன புரவசேரி கல்வெட்டு குறிப்பிடுகிறது. பிற்கால சோழர் காலத்தில் நாஞ்சில் நாட்டில் குடியேறிய தேவர் அடியார்கள் இசை, நடனக்கலைகளில் வல்லவர்களாகத் திகழ்ந்தனர். இவர்கள் சைவக் கோயில்களில் தேவாரமும், வைணவக் கோயில்களில் திருவாய் மொழியும் இசையோடு பாடி வந்ததாகத் தெரிய வருகிறது. இக்கலைஞர்கள் கோவில்களில் மட்டுமே தங்கள் கலைத் திறனை வெளிப்படுத்தினர். வேறு பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதில்லை. குமரி மாவட்டத்திலுள்ள சிறு தெய்வக் கோவில்களில் வில்லுப்பாட்டு, கணியான் ஆட்டம், பானைக்கூத்து போன்ற நாட்டார் கலைகள் வளர்ந்து வந்தன. சுசீந்திரம் கோபுரத்தின் மாடியிலும், திருவட்டாறு ஆலயத்தின் கருவறை வெளிச் சுவரிலும், திருநந்திக்கரைக் குடவரைக் கோவிலிலும் பழமையான சுவரோவியங்கள் காட்சி தருகின்றன.

பார்த்திப சேகரபுரம் ஆலயத்தில் ஒரு பல்கலைக்கழகம் சிறப்புடன் நிகழ்ந்தது என்று கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய செப்பேடு ஒன்று தெரிவிக்கின்றது. (திருவிதாங்கூர் தொல்பொருள் ஆய்வுத்தொடர் பாகம் 1 பக்கம் 14) இப்பல்கலைக் கழகம் அரசின் தலையீடின்றி பேராசிரியர்களின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு சிறந்த முறையிலே நடந்து வந்தது. பலமாணவர்கள் அங்கு இலவசமாக கல்வி பயின்றது மட்டுமல்ல பயிற்றுவிக்கவும் செய்தனர். குற்றம் செய்த மாணவர்கள் அங்குக் கடுமையாக தண்டிக்கப்பட்டனர். அக்கலைக் கூடத்தில் கல்வியறிவு மட்டுமல்ல போர்ப் பயிற்சியும் அளிக்கப்பட்டது. இவை யாவும் அச்செப்பேடு தரும் அரிய செய்திகள். இவ்வாறு குமரி மாவட்டத்திலுள்ள ஒரு கோவில் பல்கலைக் கழகம் அமைத்து பல்வேறு துறை அறிவை வளர்த்தது என்று வரலாற்றிலிருந்து நாம் அறிய முடிகிறது.

கல்லிலும் உலோகத்திலும் கலைவண்ணம் காட்டும் திறன்மிக்க பல கலைஞர்களைக் கொண்டது குமரி மாவட்டம். மைலாடி கலைக் கூடம் மிகவும் பிரசித்தி பெற்றது. சுசீந்திரத்தை அடுத்துள்ள காக்கம்புதூர், வடசேரி, திருப்பதிசாரம் போன்ற பல இடங்களில் தெய்வங்களின் திருவுருவங்களை அழகுடன் செதுக்கும் திறமை வாய்ந்த, சிற்பிகள் பலர் இன்றும் தங்கள் கைவண்ணங்களைக் காட்டிக் குமரி மாவட்டத்தின் பெருமையை நிலைநாட்டி நிற்கின்றனர்.

500 ஆண்டுகளுக்கு முன்புகூட நமது கோட்டாற்றில் சிற்பக்கூடம் ஒன்று சிறப்புடன் திகழ்ந்தது என கல்வெட்டுக்களிலிருந்து நாம் அறிய முடிகிறது. அந்த கலைக் கூடத்தில் பல சிற்பிகள் தங்கி கலை வளர்த்தனர். அவர்களுள் கொம்மண்டை நயினான் முதலி என்பவரும் தம்புரான் குட்டி என்பவரும் தலைசிறந்து விளங்கினார்கள் என்றும் அவர்கள் இருவரும் ''சிற்பப்புரந்தரன்'' என்ற சிறப்பு விருதினைப் பெற்றிருந்தனர் என்றும் தமிழ்நாடு அரசு தொல்பொருள் துறையினர் வெளியிட்டுள்ள கன்னியாகுமரி கல்வெட்டுகள் என்ற தொகுப்பு நூல் கூறுகின்றது. (கன்னியாகுமரிக் கல்வெட்டுகள் முதல் தொகுதி. எண். 1968[29-ஏ; மூன்றாம் தொகுதி எண். 1969/291)

இவ்வாறு குமரி மாவட்டக் கோவில்கள் பல்வேறு சிறப்புக்களைக் கொண்டு விளங்கியது மட்டுமல்ல பல்வேறு கலைகளை வளர்த்து சிறந்த கலைக் கூடங்களாகவும் திகழ்ந்து வந்துள்ளன. இம்மாவட்டத்திலுள்ள கோவில் அமைப்புகள், கோவிலின் கலையம்சங்கள், வழிபாட்டு முறைகள் இவை தமிழகத்தின் பிற மாவட்டங்களைப் போல் அல்லாமல் தனித்தன்மை பெற்று விளங்குகின்றன. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக மண்ணுக்கும் கல்லுக்கும் மரத்திற்கும் உயிர் கொடுக்கும் மாபெரும் தெய்வீகக் கலையை கோவில்கள் மூலம் வளர்த்து நமது குமரி மாவட்டம் பெருமைப் படுகிறது.




கம்பன் கவிநயமணி

## வே. தியாகராஜன் (5)

அம்மையார் திருமஞ்சனமாடி, சரசுவதி லட்சுமியாகியவர்களால் அலங்கரிக்கப்பெறுகிறார். கற்பகத்தரு தேவியாருக்கு வேண்டிய நகைகளையளிக்கிறது. மங்கல வாத்தியங்கள் ஒலிக்க, மலர்மாரி பொழிய, திலோத்தமை கண்ணாடி எடுத்துவர, ஊர்வசி ஆலவட்டம் வீச, மேனகை மலர்த்தட்டெடுக்க, லட்சுமி சரசுவதியர் கைகொடுக்க, அம்மை சிவபெருமான் பக்கத்தில் எழுந்தருளினாள். அப்போது இறைவன் திருவடியை விளக்கி ஆசிபெற்ற திருமால் மீனாட்சியம்மையின் கரத்தைச் சிவபெருமானது கையில் வைத்து, தன் வாயால் மந்திரங்களைச் சொல்லித் தாரை வார்த்தார்.

"அக்கலை நின்ற மாயோன் ஆதிசெங்கரத்து
நங்கை
கைத்தலம் கமலப்போது பூத்ததோர்
காந்தளொப்ப
வைத்தரு மனுவாயோதிக் கரகநீர்
மாரிபெய்தான்
கொத்தலர் கண்ணி விண்ணோர் தொழுது
பூமாரி பெய்தார்''.

அரம்பைகள் ஆடினார்கள், வித்யாதரர்கள் பாடினார்கள், முனிவர்கள் ஹர ஹர என்று கூறி வணங்கினார்கள். சாக்கிய நாயனார் என்னும் பக்தர் கல்லை விட்டெறிந்த காலத்தில் அது மலராக இறைவன் திருவடியில் விழுந்தது. அப்பேர்ப்பட்ட திருப்பாதத்தில் குங்குமம் தோய்ந்த அரிசி எடுத்து வீசி வேத மந்திரங்களைப் பெரியோர்கள் கூறினார்கள். ''எக்காரணம் கொண்டும் பிரியாத தெய்வீக தம்பதிகளாகிய இவர்கள் தனித்தனியாவர் மாதிரி போக்குக் காட்டி நாம் கண்டு களிக்க வேண்டுமென்ற கருணையால் கல்யாணம் செய்து கொள்கின்றார்களே; இவர்கள் கருணையே கருணை'' என அனைவரும் பேசுகிறார்கள்.

''அம்மையோடப்பன் என்ன அலர் மணம்
போல நீங்கார்
தம்மருள் விளையாட்டாலே ஆற்றநாள் தமியர்
போல
நம்மனோர் காணத்தோன்றி நன்மணம் புணர
ஞாலம்
மும்மையும் உய்ந்த என்னாத் தத்தமின்
மொழியலுற்றார்''.

இறைவன் மதுவர்க்கத்தைத் தீண்டி முறுவல் செய்து திருப்தியடைந்தபின் சரசுவதி லட்சுமி மங்களகரமான பாடல் பாட, தெய்வீக அக்னியானது வலஞ்சுழித்து எழுந்தது. அப்போது நாலு வேதங்கள் கோஷிக்க வாத்யங்களும் சங்குகளும் முழங்கவும், பிரமன் சடங்குகளை வேதத்திற் கூறிய பிரகாரம் செய்து வைக்க, பற்றற்றவருக்கு மோட்ச வீடளிக்கும் இறைவன் அம்மையின் திருக்கரத்தைப் பற்றினான்.

''சுற்று நான்மறைகளார்ப்ப, தூரியம் சங்கம்
ஏங்க
கற்ற நான்முகத்தோன் வேள்விச் சடங்குநூல்
கரைந்தவாற்றல்
முற்ற மங்கல நாண் சாத்தி முழுதுலகீன்றாள்
செங்கை
பற்றினன் பற்றிலார்க்கே வீடருள் பரமயோகி''

எல்லாம் சிவமயம், வேள்வித் தீயும் அவனே, தீயுண்டாக்கும் பிரமனும் அவனே; அம் மூலமாக உண்வு கொள்ளும் தேவனும் அவனே, புருடனும் பெண்ணுமாகித் திருமணம்

புரிந்து கொண்டாரென்றால் அந்த மகிமையை யார் கூறமுடியும்? பிறகு இறைவன் தீயில் பொறியிட்டு, தான தருமங்களைச் செய்து தீயை வலம் வந்தார். அம்மை பராசக்தியின் திருப்பாதத்தை அம்மியின் மீதிட்டு கல்யாணத்திற்கு வந்திருந்த அருந்ததி வசிட்டர் ஆகியவரைப் பார்த்து அருளினார். அம்மி மீது கால் வைத்த நீ அடியேனுடைய மனமான கல்லிலும் காலை வைத்துக் காப்பாற்றுவாய் என எண்ணி உன்னைத் துதிக்கிறேன்'' என்று பாடுகிறார்.

''விழி விருந்துதவும் நின் திருமணத்தில்
விமலனார் கரமலர் மேற்கொண்டு
ஒழிவரு கருங்கல் மிசையுறு நின்தாள்;
உற்றஎன் கரமலர் மேற்கொண்டு
இழிவர அடியேன் மனக்கலினிடத்தும்
இயைந்துறும் என்றுனைத் துதித்தேன்
கழிநசை முனிவர் சூழ் திருவானைக்கா
வகிலாண்ட நாயகியே''

இவ்வாறு திருமணமான பின் இறைவன் மாறிய பெருமையையும் அழகையும் கூறுகிறார். வரும்போது கொண்டு வந்த ரிஷபக் கொடி மீன்கொடியாக மாறிற்று; பாம்பணிகள் பொன்னணிகளாயின; கடுக்கை மலர் வேப்ப மாலையாயிற்று; புலித்தோல் பொன்னாடையாகவும் சந்திரமுடி வைரமுடியாகவும் மாறி இறைவன் சோம சுந்தரபாண்டியன் என விளங்கினான்.

''அதிர்விடைக் கொடி அங்கயற் கொடியாக;
அராக்கலன் பொற்கலனாக
பொதியவழ் கடுக்கை வேம்பலராக; புலியதள்
பொலந்துகிலாக
மதிமுடி வைர மணிமுடியாக மறைகிடந்தலம்பு
மாமதுரைப்
பதியுறை சோமசுந்தரக் கடவுள் பாண்டியனாகி
வீற்றிருந்தான்''

பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் ''என் அம்மை மீனாட்சியைத் திருமணம்செய்து கொண்ட பின்னர் சிவபெருமான் பெரிய மனிதராகிவிட்டார்'' எனக் கூறி வியக்கிறார்.

''ஆனையுரித்து அதள்தனைப் போர்த்திட்டு
அடியும் பட்டு
மானமழிந்து அங்கே இறந்தே திரிந்த மதுரைச்
சொக்கர்
ஞானமிக்கப் பெற்று வாழ்ந்த தெல்லாம்
சொக்கநாயகியாள்
பானை பிடித்த முகூர்த்தத்தினால் வந்த
பாக்கியமே''

இதே பொருள் கிடைக்கும்படி பரஞ்சோதி இறைவனைக் காப்பிலேயே பாடி விடுகிறார்.

''சடைமறைத்துக் கதிர்மகுடம் தரித்து
நறுங்கொன்றையந்தார் தணந்துவேய்த்
தொடைமுடித்து விடநாகக் கலனகற்றி
மாணிக்கச் சுடர்பூண் ஏந்தி
விடைநிறுத்திக் கயலெடுத்து வழுதிமருமகனாகி
மீன நோக்கின்
மடவரலை மணந்து உலகமுழுதாண்ட
சுந்தரனை வணக்கம் செய்வாம்''

அவ்வாறு சோமசுந்தர பாண்டியனார் இறைவன் விளங்கிய காலத்தில் உலகத்தவர் சிவபூசை விடாது செய்ய வேணுமென்று காட்டுவதற்காக தானே ஒரு சிவலிங்கம் பிரதிட்டை செய்து பூசித்தார் என்று கல்லாடம் கூறுகிறது.

''முலைமூன்றணைந்த சிலைநுதல் திருவினை
அருமறை விதிக்கத் திருமணம் புணர்ந்து
மதிக்குலம் வாய்த்த மன்னவனாகி
மேதினி புரக்கும் விதியுடை நன்னாள்
நடுவர் நகர்செய்து அடுபவந் துடைக்கும்
அருட்குறி நிறுவி அருச்சனை செய்த
தேவநாயகன்''

என்பது கல்லாட நூலின் வாக்கு, திருக்கல்யாணம் முடிந்த பின் யாவரையும் இறைவன் விருந்திற்கு அழைக்க ''இறைவனே! உனது நர்த்தன கோலமான சிதம்பர நாயகனைத் தரிசித்துத்தான் உணவு கொள்வது எமது வழக்கம்'' என்றனர், திருக்கல்யாணத்துக்கு வந்து தரிசித்து, பொற்றாமரையிலும் நீராடிய பதஞ்சலி வியாக்ரபாதர் என்ற இரு முனிவர்களும்.

தில்லை நடராஜப் பெருமானின் பெருமை அளவிட முடியாதது. நடராஜப் பெருமானின் தோற்றம், அழகு, சிறப்பு யாவற்றையும் பல பெரியோர்கள் அனுபவித்துள்ளனர். அந்த அழகான நடன கோலத்தைக் காண்பதற்கு ''மனித்த பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே'' என்கிறார் அப்பர் பெருமான், இறைவனது திருக்கரத்திலுள்ள டமருகத்திலிருந்து உலகம் உண்டாகிறது. அபயத் திருக்கரம் காப்பாற்றுகிறது. அக்கினியை ஏந்திய கரம் சம்ஹாரம் செய்கிறது. ஊன்றிய திருவடி திரோதன (மறைத்தல்) சக்தியை உடையது. தூக்கிய திருவடி அருளும் தொழில் செய்கிறது.

''தோற்றம் துடியதனில் தோயும்
திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்-ஊற்றமாய்
ஊன்று மலர்ப் பதத்தே உற்றதிரோதம்; முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.''
(உண்மை விளக்கம்)

நடராஜ மூர்த்தியின் நடனம் மிக அழகானது. நமது பிறப்பு இறப்பாகிய பிணிக்கு மருந்து. குழந்தையின் குடல் மருந்தைக் குடித்து ஜீரணிக்கச் சக்தியற்றதாயிருந்தால், தாய் அம்மருந்தை உண்டு, அதன் பயனைத் தன் பாலின் மூலம் குழந்தையின் வயிற்றில் செலுத்துவது போல, நடராஜ மூர்த்தியின் திருநடனத்தினை அம்மை தரிசித்து, தனது அருள் மூலமாக உலகிற்கு அளிக்கிறாள். ''ஏற்கனவே துறவு பூண்ட எனக்கு இல்லறம் கிடைக்காது. துறவிலும் என்னிடம் என்ன குறையிருக்குமோ? முக்தியடைய. வேறு என்ன வழி என யோசித்தேன். திருவாரூரில் பிறந்தாலால் முக்தி என்றனர். ஏற்கனவே நான் வேறு ஊரில் பிறந்து விட்டேன். காசியில் இறத்தல் நன்மை என்றனர். நிலையில்லாத என் உடல் காசி போய்ச் சேரும்வரை நீடிக்கும் என்பது என்ன நிச்சயம்! சிதம்பரம் தரிசிக்க

முக்தி என்பதால் பெருமானே உன்னிடம் வந்து விட்டேன், எனக்குப் பக்தி இல்லைஎன்று ஏதாவது காரணம் கூறி என்னைக் கைவிட்டு விடாதே. இறைவனே நீ ஒரு மருந்து. மருந்தை மகிழ்ச்சியுடன் சாப்பிட்டாலும், முகஞ்சுளித்துத் தலை நடுங்கி வெறுத்துச் சாப்பிட்டாலும் இருவருக்கும் பிணியை நீக்கிவிடுமே. அம்முறையில் சனனமரணப் பிணியகற்றும் மருந்தாகிய நீ எனக்குப் பக்தியிருந்தாலும் இல்லா விட்டாலும் காத்தருள வேண்டும்'' என நடராஜப் பெருமானிடம் மன்றாடுகிறார் குமரகுருபர சுவாமிகள். சிதம்பர மும்மணிக் கோவை, சிதம்பரச் செய்யுட் கோவை ஆகிய இரண்டும் உலகிற்குக் குமரகுருபர சுவாமிகள் அருளிய ஒப்பற்ற நூல்கள், படித்து இன்புற்றுப் பயனடைவது நம் கடமை.

பெண்ணின் நடனத்தை ரசிப்பதில் என்ன சுகமிருக்கிறது. பெருமானே! உனது நர்த்தனத்தில் உள்ள இன்பம் அதில் உண்டா என மகா வித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள்.

''வரியமர் முலையார் புரிநடம் நோக்கி மகிழும
தொழிந்து மாலயற்கும்
அரிய நின்னடம் அன்பூற்றெழ நோக்கி
ஆனந்தமடைவது என்றோ?
பொரியரை மாச்சூர் மாவினம் என்று
புரந்தரன் ஆங்குயிர்க்கினமாம்
கரிய பைங்குழல்கள் சினைபுகுந்துழக்கும்
கலைசைவாழ் சிதம்பரேச் சுரனே.''

என்பது அவர் பாடல்.

திருவண்ணாமலையில் இறைவன் சோதியுருவாகக் காட்சியளிக்க அடிமுடிதேடித் திருமாலும் அயனும் சோர்ந்தனர் என்பது வரலாறு. ஏ மனமே நீ பிரமனுமில்லை. திருமாலுமில்லை. சிதம்பர நடராஜாவும் தீயுருவில்லை. நீ பாக்கியம் செய்துள்ளாய். சிதம்பரத்தில் நடராஜ மூர்த்தி அம்மையுடன் நடனமாடுகிறார். அடிமுடி காணலாம்'' எனப் பேசுகிறது சிதம்பரத் தலபுராணம்.

''காதரமார் தருமனமே! கமலமலரயனல்லை!
சீதரமாயனுமல்லை! சிவனும் அனல்திரளல்லன்
நீ தரமாய ருளுடையை! நிலைகலங்கேல்!
இனிமன்றில்
ஆதரமாதுடன் ஆடும் அண்டநடங்
கண்டனையால்.''

இவ்வளவு பெருமையுள்ள நடராசமூர்த்தியைத் தரிசித்த பின்னரே உணவு கொள்ளும் வழக்கம் சிதம்பரத்தில் இன்றுகூட சிலருக்கு உண்டு. அப்பேர்ப்பட்ட காரியத்தையே செய்ய நாங்களும் ஆசைப்படுகிறோம் என்றனர் வியாக்ரபாதர் பதஞ்சலி ஆகிய உத்தமர்கள்.

''பொன்னவிர் கமலம் பூத்த புனிதநீ ராடித்
நன்னெறி நியமமுற்றி நண்ணினார்[ தத்தம்
புலிக்காலோனும்
பன்னக அரசும் தாழ்ந்து பரவியம்பலத்
துளாடும்
நின்னருள் நடங்கண்டுஉண்பது அடியேங்கள்
நியமமென்றார்.''




**நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்**
**எவ்வம் டைத்திவ் வுலகு.**

-திருக்குறள்

''அப்படியாயின் அந்தக் கூத்தை இங்கேயே ஆடிக் காட்டுகிறேன்'' என இறைவன் கூற, அவ்விடத்தில் ஒரு வெள்ளியம்பல மண்டபம் தோன்றியது. கயிலை மலைதான் உருமாறி வந்ததோ? அல்லது இறைவனது வாகனமான இடபதேவர்தான் மண்டபமாக மாறி வந்தாரோ? சந்திர மண்டலம் இவ்வாறு வந்து விட்டதோ'' என அனைவரும் அதிசயித்தனர். அம்மேடையில் கோடி சூரியப் பிரகாசத்துடன் இறைவன் தோன்றினார். சிவகணங்கள் மொந்தை எனும் வாத்யம் வாசிக்க, நாராயண மூர்த்தி இடக் கையில் தாளம் போட, நாரதர் தும்புரு பாட இறைவன் ஆடினார். சிரத்திலிருந்து கங்கையின் சலசலப்பான ஓசை, மார்பிலுள்ள மாலையினுள்ள தேனைச் சாப்பிடும் வண்டுகளின் ஓசை, கையிலிருந்த அக்கினியின் ஓசை, மங்கள வாத்தியங்களின் ஓசை, மந்திர முழக்கம் திருவடிச் சிலம்பின் ஓசையெல்லாம் சேர்ந்து அன்பர்களின் மனத்தை ஆனந்தமயமாக்கிவிட்டது.

நடனங்கண்ட அனைவரும் சிரமேற் கரங் கூப்பி வணங்கினர். வியாக்ரபாதர், பதஞ்சலி ஆகிய இருவரும் எல்லையில்லா ஆனந்தங் கொண்டு தோத்திரம் செய்து பாடி மகிழ்ந்தனர். ''எமக்காக வெள்ளி அம்பலத்தில் ஆடிய கருணையை என்னவென்போம்'' என உருகினர். நல்லோராகிய அவர்கள் மூலம் யாவருக்கும் அந்த நடனம் காணும் பேறு கிட்டது. ஆட்டம் முடிந்த பின் ''உங்களுக்கு இன்னும் என்ன வேண்டும்''? என இறைவன் அம்முனிவர் பெருமக்கள் இருவரையும் கேட்க, 'இறைவனே! இதே நிலையில் நின்று இம்மதுரையில் அனைவருக்கும் காட்சி கொடுத்து உலகத்து மக்கள் யாவருக்கும் அருள் புரிய வேண்டும்'' என அவர்கள் வணங்கி வரம் வேண்ட 'அப்படியே ஆகுக''! என்றார் மதுரைநாயகன்.

தில்லை நடராஜரைப் பற்றிக் கூறும் போது, ''மூர்த்தி சிறிது கீர்த்தி பெரிது'' என்பர். மதுரை நடராஜரோ ''மூர்த்தியும் பெரிது கீர்த்தியும் பெரிது'' மாப்பிள்ளைத் திருக்கோலத்தில் நடனமாடியதால் பெரிய திருவுருவத்துடன் விளங்குகிறார் போலும் இப்பெருமான்.

(தொடரும்)



சித்திர பாரதம்
கதை வடிவம் செல்வேள்
படம் எம். என். ராஜா
அத்தினாபுரம் வந்து சேரும் பாண்டவர்கள் திருதராட்டி-ரரையும் காந்தாரியையும் கண்டு வணங்குகிறார்கள்.
மங்களம் உண்டாகட்டும்
வீடுமரையும், துரோணரையும் வணங்கி மகிழும் பாண்டவர்கள், விதுரரின் மாளிகையில் தங்கி விருந்து-
1
உண்டு மகிழ்கிறார்கள்
மறுநாள் காலை, சூரியவணக்கம் செய்தபிறகு தருமர் குபேரனைப் போல வீற்றிருந்து முனிவர்களுக்கும் அதிதிகளுக்கும் சொர்ணதானம் செய்கிறார்.
2
துரியோதனன், சபா மண்டபத்தில் வீற்றிருந்து பாண்டவர்களைக் கவிழ்ப்பது எப்படி என்று சதியாலோசனை புரிகிறான்
3
பிரதிகாமி! நீ போய் பாண்டவரை அழைத்து வா!
4
பிரதிகாமி துரியோதனன் கட்டளையைத் தருமரிடம் வந்து தெரிவிக்கிறான்
திரௌபதி! நீ போய் காந்தாரி-யின் அரண்மனையில் தங்கி இரு.
அப்படியே ஆகட்டும் சுவாமி.
5
சபா மண்டபத்திற்கு வந்து சேரும் பாண்டவர்களை உள்ளத்தில் நஞ்சும், உதட்டில் தேனுமாக உபசரிக்கிறான் துரியோதனன்.
6
துரியோதனன் கட்டியிருக்கும் சித்திர மண்டபத்தைச் சுற்றிப் பார்த்துத் தருமர் பாராட்டுகிறார்
தம்பி துரியோதனா! அருமை! அருமை! இது போன்ற சித்திரமண்டபத்தை நான் கண்டதே இல்லை
7



தந்தையின் மாளிகையில் அறுசுவை விருந்து தயா-ராகிக் கொண்டிருக்கிறது! அதுவரை என்ன செய்யலாம் மாமா?
காலம் கழிப்பதற்கா வழி இல்லை: தருமர் என்னுடன் தாயம் ஆடட்டும்
வேண்டாம், மாமா வேண்டாம். வஞ்சனை சூதினை நான் ஆட மாட்டேன். தரும சாஸ்திரங்கள் சூதினைப் பழித்துரைப்பதை நீங்கள் அறியமாட்-டீரா?
தருமா! யாவரும் பார்க்க நாம் பாச்சிகையை உருட்டி ஆடப் போகிறோம் இதில் என்ன வஞ்சகம் நான் செய்ய முடியும்? மேலும் பந்தயம் வைத்து ஆடப் பொருள் இல்லாத பரம தரித்திரனா நீ?
நான் தரித்திரனும் இல்லை பொருளுக்கு அஞ்சும் கருமியும் இல்லை' சூது தீது.! அதனால் தான் அஞ்சுகிறேன்.!
பசுவைக் கொல்லும் கொலைப் பாதகம் போல சூது ஒன்றும் கொடியது அல்லவே! அச்சப்-படாமல் தருமா நீ என்னுடன் சூதாடலாம்.
தருமரின் தயக்கம் கண்டு கர்ணன் அவரைச் சாடுகிறான்
பொழுது இனிது கழியச் சூதாட அழைத்தால் அஞ்சி நடுங்குகிறாயே! சூது போருக்கே அஞ்சும் கோழை நீ, மோது போருக்கு எப்படித் தொடை நடுங்குவாயோ?
கர்ணனின் பழிப்புரை கேட்டு அர்சுனன் கொதிக்கிறான்.
கர்ணா! மோசத்திற்கு இடமான சூது வேண்டாமென எம் அண்ணா தயங்கினால் அவரை அவமானமா செய்கிறாய்? உன் நாவைத் துணிக்-கிறேன் பார்.
அர்ச்சுனா! பொறு! பொறு! சாந்தம் கொள். நான் போரிட எழுந்தால் இங்கு நிற்கும் எவர்தான் என்னை வெற்றி கொள்ள முடியும்?
அர்ச்சுனனை சமாதானப்படுத்தும் தருமர், துரியோதனன் பின்னிய சதி வலையில் வீழ்ந்தே விடுகிறார். "சகுனி மாமா! ஆகட்-டும்! எனக்குச் சூதாடவும் அச்சம் கிடை-யாது. வாருங்கள் ஆடுவோம்"

# திருக்குட நீராட்டு விழா கண்ட திருக்கழுக்குன்றம்!

முதுபெரும் புலவர் **வேதாசலம்**

**கழுகு முனிவர்கள் வழிபட்டது. சண்டன் பிரசண்டன்.**

சான்மலி என்னும் நாட்டில் வாழ்ந்த விருத்தசிரவரன் என்கிற முனிவருக்கு சண்டன் பிரசண்டன் என்கிற இரு மைந்தர்கள் தோன்றினர். அவ்விருவரும் முன்செய்த தீவினைத் தொடர்பால் கழுகுப் பறவைகளின் உருவம் பொருந்தினார்கள். அவர்களை விருத்த சிரவரன் ''நீங்கள் பறவைகளுக்கு அரசாக விளங்கி இருங்கள்'' என்று கூறினான். அவர்கள் ''எங்களுக்கு அரசாட்சி செய்வதிலும் இல்லற வாழ்விலும் விருப்பம் இல்லை. ஞான முறையால், பரமசிவனை அடையத் தக்க முக்திப் பேற்றினைச் சொல்லுங்கள்'' என்று வேண்டினர். விருத்தசிரவரன் மகிழ்ந்து, சிவபூசை முறையினை உணர்த்தி ''வேதகிரியில் சென்று பரமசிவத்தை வணங்குங்கள்'' என்றுஅனுப்பினான். சண்டன், பிரசண்டனாகிய கழுகுருவமுடைய அவ்விருவரும் வேத வெற்பை அடைந்து நறுமணமுள்ள மலரினாலும் நீரினாலும் பரவுதல் செய்து பூசித்தனர். பரமசிவம் அவர்கள் முன் தோன்றி, '' உங்கள் விருப்பத்தைச் சொல்லுங்கள்'' என்றார். அவர்கள் ''ஒப்பில்லாத முத்தியே அடியேங்களுக்கு வேண்டியது'' என்கிறார்கள். சிவபெருமான் ''இந்தக் கிரேதாயுகம் சென்ற பின் உங்களுக்கு முக்தியை அளிக்கிறோம். அது காறும் நம் பேரவையில் சிவ கணங்களுக்குத் தலைவராய் இருங்கள்'' என்றருள் பாலித்தார். அவர்களும் அவ்வாறிருந்து முக்தி எய்தினார்கள்.


**சம்பாதி — சடாயு.**

திரேதாயுகத்தில் ஒளிபொருந்திய திங்களைப் போன்ற வெண்மை நிறம் உடைய கழுகுகளுக்கு இறைவர்களாகிய சம்பாதி, சடாயு என்னும் கழுகுகள் மிகுந்த பலத்துடன் விளங்கி இருந்தனர். அவர்கள் தங்களுக்குள், பலத்தால் நான் பெரியவன் நான் பெரியவனென்று பகைத்தனர். மூத்த சம்பாதியும் பலம் பொருந்திய சடாயு என்ற தம்பியும் ''கதிரவனுக்கு மேல் போய் திரும்புவோம். திரும்பும்போது பார்க்கின்றவர்களுக்கு நம் உடல் பலம் தெரியும்'' என்று சபதம்செய்து முனிவர்கள் கூட்டத்தைச் சான்று வைத்து மேருகிரியினின்று எண்ணில் காலம் வானையொட்டி பறக்கலாயினர். அளவிலாக் காலம் இவர்கள் பறத்தலைக் கண்டு தேவர்களும் முனிவர்களும் மயங்கி ஓடினார்கள். அவர்களுடைய சிறகுக் காற்றினால் வித்தியாதரர்கள் சித்தர்கள் கின்னரர்கள் என்னும் இவர்கள் செல்கின்ற அளவற்ற தேர்களும் விமானங்களும் வழி தப்பி ஓடின. விண்மீன்களும் கதிர் மண்டலத்துப் பச்சைக் குதிரைகளும் பறந்து செல்கின்றவர்களைக் கண்டு மனங்கலங்கிக் கண்களை மூடின.

இவர்கள் இவ்வாறு கதிரவன் மண்டலம் நாடி வருவதைக் கண்ட கதிரவன் மண்டலத்திலிருக்கும் கணங்கள் பயந்து ஓடி கதிரவனிடம் கூறினர். இவ்வாறு இவர்கள் கதிரவன் மண்டலத்தில் புகுந்த அளவில் அங்கிருந்த வாய்மையில் சிறந்த அஞ்சனன் என்னும் முனிவன் அக்கழுகுகளை நோக்கி,''நீங்கள் ஆயிரங்கதிர்களையுடைய கதிரவன் கோயிலை அணுகும்படி செல்கிறீர்கள். ஆதலால் நீங்கள் தீயை எடுத்து ஆடையில் அடக்கிக் கொள்ளவும் எண்ணம் கொள்வீர்கள். தம்மில் தகுதியுடையவர்களுடைய வெம்மையைக் கண்டஞ்சாதவர்கள் இப்பிறப்பில் மட்டும் அன்றி மறுபிறப்பிலும் துன்புறுவார்கள். நெறியில் செல்லுங் கதிரவனைத் தடுத்ததன்மையால், உங்கள் தருக்கைஉங்கள் தீமையே அழித்துவிடும். கதிரவனுடைய நெருப்பினால் நீங்கள் இருவரும் மனம் வெந்து மேனி கரிந்து வெந்து ஒன்றாய் 'விழக்கடவீர்' என்று சாபம் மொழிந்தார்.

முன் சென்றவனாகிய சம்பாதி, சிறகு வெந்தனன். அது வெந்தபின் சிறகு எல்லாம் சிந்திப்போய் பூமியில் விழுந்தான். பின்வந்த தம்பியாகிய சடாயு ஒளி பொருந்திய சிறகு வேகாதவனாய்ப் பொலிவுள்ள உடல் பொரிந்து துன்பத்துடன் அழுதான். இவ்வாறு விழுந்த இருவரும் வருந்தி வானில் இருக்கும் அஞ்சன முனிவனை அழைத்து ''எங்கள் இக்குறை நீங்கும் முறைமையை அய்யனே! சொல்லும்'' என்று வேண்டினர். பெரிய வேதாசலத்தில் வீற்றிருக்கும் பரமசிவத்தைப் பூசித்தால் இந்தக் குறை அறிவில்லாதவர்களாகிய உங்களை விட்டோடும்' என்று அவர்களை அம்முனிவர் அனுப்பினார்.

அவ்வஞ்சன முனிவர் கூறிய வண்ணம் சம்பாதி, சடாயுவாகிய இருவரும் வேதகிரியினிடத்திற் சென்று அங்கு இருக்கும் தடாக நீராலும் மலர்களாலும் இறைவனைப் பூசித்தனர். அந்தத் திரேதாயுகத்தில் அவ்விருவருக்



கும் பரமசிவம் தரிசனம் கொடுத்தருளி அவர்கள் உடலிற் பொருந்திய வெப்பத்தைத் தணித்தருளிப் பழையபடி உண்டாகக் கிருபை செய்து, அதன் பின்பு சம்பாதியை நோக்கி ''சீதையைத் தேடி இராமன் விடுக்கும் தூதர்களால் உனக்குச் சிறகு உண்டாகும்'' என்றருள் செய்தார். இத்திருவருளைப் பெற்றுக்கொண்டு அவர்கள் சென்றார்கள்.

**சம்புருத்தன் — மாருத்தன்.**

துவாபரயுகத்தில், பார்வதி தேவியாருக்கு ஒரு பாகம் தந்தருளிய பரமசிவம் வீற்றிருந்தருளுகின்ற உருத்திரகோடியில் சம்புருத்தன், மாருத்தன் எனும் பெயரினையுடைய இருவர் நெடுங்காலம் தவஞ்செய்து கொண்டிருந்தார்கள். இரண்டு உடலுக்கு ஒருயிர்போல் இருந்த இவர்களில் மூத்தவன் ''சிவமே பெரிது'' என்றனன். அது கேட்ட இளையவன் ''சக்தியே பெரிது'' என்று கூறினான். இதனால், இவர்களுக்குள் ஒழியாத பகையுண்டாகியது. இதனை எந்த முனிவர்களிடம் சொன்னாலும் அவர்கள் எம்போலியர்களால் சொல்வ தரிது என்று கூறிவிட முனிவர் இருவரும் கூடிச் சென்று பரமசிவத்தின் முன் பணிந்து நின்று விண்ணப்பஞ் செய்ய சிவபெருமான் ''சிவம், சத்தி என்கிற இரு மொழியும் ஒரு மொழியோடொக்கும். ஆதலின் உங்கள் கோபத்தை விடுங்கள்'' என்று திருவாய் மலர்ந்தருளினார். சிவபெருமான் கூறியும் இருவரும் ஒருவரோடோருவர் பொறுமை இழந்து சக்தியே பெரிதென்றும் சிவமே பெரிதென்றும் வாதிட்டனர். அவ்விருவரின் நிலையைக் கண்டு பரமசிவமும் பராசக்தியும் ஒருவர் முகத்தை யொருவர் பார்த்துப் புன்சிரிப்புக் கொண்டனர். ஒளியும் மாணிக்கமும், கடலும் அலையும், அமுதமும் சுவையும், எள்ளும் எண்ணெயும், பொன்னும் அணியும் போல் பிரியாமலிருக்கிற தங்களைப் பிரித்துரைத்த அவர்களை சக்தி பெரிதென்றவனைச் சக்தியும், சிவம் பெரிதென்றவனைச் சிவமும் நோக்கி, ''நீங்கள் இருவரும் கழுகுகளாய்ச் சுழலக்கடவீர்கள்'' என்று சபித்தார்கள். அவர்கள் இருவரும் அப்பொழுதே கழுகுகளாகி நடுநடுங்கி ''அய்யனே! எங்கள் குற்றங்களைப் பொறுத்தருளி, இக்கழுகுருவம் நீங்கும்இடமும் காலமும் கட்டளையிட்டருள வேண்டும்'' என்று விண்ணப்பம் செய்ய ''இந்த யுகம் நீங்கும்போது அந்த வரம் உங்களுக்குத் தந்தருளுகிறோம். அப்படித் தருகிறவரைக்கும் தவத்தையும் பூசையையும் நீங்கள் இவ்வேதகிரித்தலத்தில் செய்யுங்கள்'' என்று கட்டளையிட்டருளினர். அவ்விருவரும் அவ்வாறே தவத்தையும் பூசையும் அன்புடன் செய்து பழைய உருவம் பெற்றுய்ந்தார்கள்.

**பூடா — விருத்தா.**

கலியுகத் தோற்ற முதல் வேதவெற்பினிடத்து பூடா, விருத்தா என்கிற இருமுனிவர் நெடுங்காலம் தவம் செய்தார்கள். இளையவனும் மூத்தவனும் அரிய தவஞ்செய்த அளவில் சிவபெருமான் திருவுளம் மகிழ்ந்து, ''உங்களுக்கு நம்முடைய திருமேனியருள் செய்தோம். ஒரு கற்ப காலம் அந்தப் பதவியில் இருங்கள், அவ்வாறிருந்தால் பிறகு முத்தியையும் அளிக்கிறோம்'' என்றருளிச் செய்தார்.

அவர்கள் ''அது வரைக்கும் ஐம்பொறிகள் நன்மார்க்கத்தில் இருப்பதை யார் கண்டார்கள்? நிருமல மூர்த்தியே! இப்போதே எங்களுக்கு முத்திப் பேற்றினை அளித்தருள வேண்டும்'' என்கிறார்கள்.

சிவபெருமான் ''நம்முடைய திருமேனி போல் உருவந்தரித்திருக்கலையும் விரும்பாதவர்களாய், நம்முடைய திருவருளால் உரைத்த ஏவலையும் ஏற்றுக் கொள்ளாது நீக்கி விட்டீர்கள். ஆதலால், நீங்கள் கழுகுருவமாகப் பிறந்து கடல் சூழ்ந்த உலகில் திரியுங்கள்'' என்று சபித்தார்.

அந்த இருவரும் பயந்து 'எங்கள் குறையைப் பொறுத்தருளும்' எனப்பணிந்து, 'கழுகுருவமாகப் பிறந்தாலும் உம்முடைய திருவடித் தொண்டில் மயக்கம் இல்லாமையும் இந்தச் சாபத்தின் முடிவும் கட்டளையிட்டருள வேண்டும்'' என்று விண்ணப்பித்தனர். சிவபெருமான் ''நீங்கள் காசிப முனிவரிடத்தில் கழுகுகளாய்ப் பிறந்து, உங்களுடைய மூக்குகளால் இந்த மலையினைக் கீறினால் அதில் ஆகாய கங்கை அலைவீச உண்டாகும். அந்தத் தீர்த்தத்தில் முழுகி விருப்பத்துடன் எம்மைப் பூசியுங்கள். அவ்வாறு பூசித்துக் கலியுக முடிவில் முத்தி அடையுங்கள்'' என்று திருவாய் மலர்ந்தருளினார். இவ்வாறு அருளியவுடன் அவ்விருவரும் கைகுவித்துத் தொழுது, காசிப முனிவரிடத்தில் போய் சம்பு-ஆதி என்ற பெயருடன் கழுகுகளாய் பிறந்து, பரமசிவம் கட்டளையிட்டபடி வேதகிரியில் தம் மூக்குகளால் கீறினர். தடாக முண்டாகியது. அதில் மூழ்கி மலையை வலம் வந்து இறைவனைப் பூசித்துக் கொண்டிருக்களாயினர். கழுகு முனிவர்கள் முறையே பூசித்துக் கொண்டு வருவதால் இப்பதிக்கு திருக்கழுக்குன்றம் எனும் பெயருண்டாகியது. கழு-கழுகு-கழுக்குன்றம், கங்காசலம் எனும் பெயர்கள் உண்டாயின.

(தொடரும்)

# தென்னிந்தியச் சிற்பக் கலையில் அர்த்தநாரி



டாக்டர் சோ. கோவிந்தராஜு

தென்னிந்திய சிவாலாயங்களில் காணப்படும் சிறப்புமிகு சிற்பவடிவங்களில் ஒன்று அர்த்தநாரீஸ்வரர் அல்லது மாதொரு பாகனார் என அழைக்கப்படும் வடிவம் ஆகும். உலகவாழ்வியக்கத்திற்கு ஆண்(சிவன்) பெண் (பார்வதி) இருவரும் சமபாதி நிலையில் இன்றியமையாதவர்எனும் இந்துமதக்கோட்பாட்டை நிலைநிறுத்தும் ஆதாரமே இவ்வடிவமாகும்.

சக்தியும் சிவமும் இன்றேல் உலகில் எச்செயலும் நடைபெறாதென்பதையும் உலகியல் வாழ்க்கையில் ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்தலே உலகியலைத் தொடரச் செய்யுமென்பதையும் காட்டும், ஆத்மீக உலகியல் வாழ்வை விளக்கும் சிற்பமே மாதொரு பாகனார்.

சிவன், பார்வதி இருவரும் இணைந்தே படைப்பியலை மேற்கொண்டனர் என்பதைக் காளிதாசர் கூட தனது ரகுவம்சத்தில் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார். அர்த்தநாரியின் தோற்றம், விளக்கம் குறித்து மத்஼ய, வாயு புராணங்களிலும், சுப்ரபேத, கர்ணாகமங்களிலும், சிற்ப சாஸ்திரமான சிற்ப ரத்தினத்திலும் கூட செய்திகள் காணப்படுகின்றன. சிவன் இவ்வுருவத்தின் வலது பாதியை ஆக்ரமித்துக்கொண்டு, ஜடா மகுடத்தில் பிறைச்சந்திரனைத் தலையில் கொண்டும், வாசுகியைக் காதில் கொண்டும், சூலம், மண்டையோட்டை கையிலேந்தியும், முப்புரிநூலை மார்பில் அணிந்தும், புலித்தோலை ஆடையாகக் கொண்டும் மிக அழகாக கம்பீரமாகப் பார்ப்பவர் மதிமயங்கும் வண்ணம் காட்சியளிக்கின்றார்.

இடது பாதியில் உள்ள உமையம்மையோ சிவனுக்கு அழகில் தானும் இணையானவள் என்பதனைஎடுத்துக் காட்டும்வண்ணம் நெற்றியில் திலகம், இடதுகாதில் பத்ரகுண்டலம், விரல்களில் மோதிரம், இடுப்பில் மேகலை, இடது கையில் பெரும்பாலும் ஓர் கண்ணாடி அல்லது தாமரை மலர் ஏந்திக் காணப்படுவது தென்னிந்திய அர்த்தநாரி சிற்பத்தின் மரபாகும்.

பெரும்பாலும் தென்னிந்தியக் கோயில்களில் அர்த்தநாரி உருவம் மூன்று கைகளைக் கொண்டு காட்சியளிக்கின்றது. சில இடங்களில் மட்டும் இரண்டு, நான்கு, எட்டு கைகளோடு காட்சியளிப்பது விந்தைக்குரிய செய்தி எனலாம். இவ்வுருவத்தோற்றம் குறித்து மேற்கண்ட நூல்களில் செய்திகள் காணப்பட்டபோதிலும், மரபு வழிச் செய்திகளைக் கொண்டுதான் இதன் முழு வரலாற்றை அறிய முடிகிறது.

ஓர் காலத்தில், கைலாய மலையில் வாழ்ந்த முனிவர்கள் அனைவரும் சிவன் பார்வதியை அடைந்து வழிபட்டனர். ஆனால் இக்கூட்டத்தைச் சார்ந்த பிருங்கி முனிவர் மட்டும் சிவனையே மனதில் கொண்டிருந்ததால் சிவனை மட்டும் வணங்கி உமையை வணங்காது நிற்க, கோபம் கொண்ட உமை அவர் 'எலும்புக்கூடாகப்போக' எனச் சாபமிட்டாள். இதைக் கண்ணுற்ற சிவன் தனது பக்தன் வாடாது இருக்க மூன்றாவது கால் ஒன்றைக் கொடுத்து உதவ, முனிவர் மகிழ்ச்சிக்குள்ளானார். இந்நிகழ்ச்சியை கண்ட பார்வதி மீண்டும் அம்முனிவரை தன்னைச்சுற்றி வலம் வந்து அடிபணிய வைக்க கடுந்தவம் செய்து சிவனின் ஓர் பாதியை பெற்றுக் கொண்டாள். ஆனால் முனிவரோ வண்டு உருவம் கொண்டு, அர்த்தநாரியின் மார்பை பாதியில் துளை செய்து சிவனை மட்டும் வலம் வந்தார். இறுதியில் பார்வதி முனிவரது ஆழ்ந்த பக்தியைப் பாராட்டி அருள் வழங்கினார் என இவ்வுருவத்தின் தோற்றம் குறித்துப் புராணங்கள் கூறுகின்றன.

இவ்வுருவத்தின் தோற்றம் குறித்து பல கருத்துக்கள் நம்மிடையே நிலவுகின்ற போதினும் இத்தகைய அரிய உருவத்தைக் கல்லில் வடிப்பது ஓர் எளிமையான செயல் அல்ல என்பது அறிஞர்களால் ஒட்டுமொத்தமாக ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு முடிவாகும்.

தமிழகத்தில் முதன்முதலாக இவ்வுருவம் மகாபலிபுரத்தில் உள்ள தர்மராசர் தேரில் தான் வடிக்கப்பட்டது என்பதனைக் கல்வெட்டுக்கள் பறைசாற்றுகின்றன. இவ்வழகிய உருவம், நேரான நிலையில் ஜடா மகுடம் அணிந்து வலது பாதியில் சிவனுக்குரிய உடற் கூறுகளோடு ஆபரணங்களோடும் காண்பவர் கவரும் வண்ணம் வடிக்கப்பட்டுள்ளது. வலப்புற மேற்கையில் மழுப்படையும் வலப்புற இடதுகை அபயமுத்திரையை காட்டி அருளாசி வழங்குகின்றது. இடதுபுறம் உள்ள உமையோ தனது மேற்கையில் கமலமலரைக் கொண்டும் கீழ்க்கையை எழிலாக தொங்கவிட்டுக்கொண்டு காட்சியளிக்கிறார். இவள் காதில் பத்ரகுண்டலத்தோடும், கைகளில் பலவளையல்களும், காலில் சிலம்போடும் உடல்முழுதும் மறைக்கப் கட்ட ஆடையோடும், பெண்களுக்கே உரித்தான நளினத்தோடும் காட்சி தருவது பண்பட்ட சிற்பியின் கைவண்ண வளர்ச்சியை எடுத்துக்காட்டுகிறது எனலாம்.

தென்னிந்தியாவில் பல்லவர்களையடுத்துச் சோழர்கள் நான்கு நூற்றாண்டுகளுக்கு மேல் பேரரசு செலுத்தினர். பல்லவர் தொடங்கிய அர்த்தனாரிசிற்பம் சோழர் ஆட்சியிலும் தொடர்ந்து மேம்பாடு அடைந்தது.

பல்லவ பாணியிலிருந்து மாறிச் சோழர் பாணியில் அர்த்தநாரி உருவம் படைக்கப்பட்ட போது, ஏற்பட்ட மாற்றங்களையும், வளர்ச்சியையும், கொடும்பாளூர், கும்பகோணம் ஆலயங்களில் உள்ள தெய்வத் திருமேனிகளிலிருந்து அறியலாம். பூதிவிக்ரமகேசரியால் கட்டப்பட்ட கொடும்பாளூர் 'மூவர்கோயிலில்' உள்ள அர்த்தநாரியின் உருவம் சமநிலையில் உள்ள உருவமாகும். இச்சிற்பம் 'அம்மை-அப்பன்' என்னும் தமிழர் வழிபாட்டை அடிப்படையாகக் கொண்டதாகும். வலதுபுற சிவனார் தமது வலது மேற்கையில் பரசுவைக்கொண்டுள்ளார், வலது கீழ்கை எதிரேயுள்ள ரிஷிபத்தைத் தொட்டுக் கொண்டுள்ளது. இடதுபாதி பார்வதியே ஒரே ஒரு பலவளையல்கள் பூட்டிய கையோடு கமலமலரை கையில் ஏந்தி காண்பவர் கவரும் வண்ணம் முகமலர்ச்சியோடு காட்சியளிப்பது சோழர்கலையின் சிற்பக் கலைச் சிறப்புக்கு ஓர் எடுத்துக்காட்டு எனலாம்.

குடந்தை நாகேஸ்வரர் ஆலயத்தில் உள்ள மற்றொரு அர்த்தநாரீஸ்வரர், சோழர்கலையின் வனப்பு மிக்க உதாரணமாகும். இங்கே, உமை தனது கையில் கமலமலருக்கு பதிலாக கண்ணாடி ஏந்தி காட்சியளிக்கிறாள். திரிபங்கி நிலையில் வலது பாதம் சிறிது வளைந்து அவ்வளைவுக்கு ஏற்ப வடமொழி இலக்கியங்களில் வர்ணிக்கப்படுகின்ற வர்ணனைகளை உறுதிப் படுத்துவதுபோல் இவளது சிற்றிடை அமைந்துள்ளது. சிவபிரானின் சிறிதே வளைந்துள்ள வலதுபாதம் உடற்கூறு முறையில் சிலைவடிக்கும் பாங்கின் வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டு எனலாம்.

தென்னிந்தியர்கள், கோயில் கட்டிடக் கலையில் எவ்வளவு தேர்ச்சி பெற்றிருந்தார்கள் என்பதற்கு சான்றாக விளங்கும் தஞ்சை பிரகதீஸ்வரர் கோயிலில் உள்ள அர்த்தநாரீஸ்வரர் புன்சிரிப்புடன் காட்சியளிக்கிறார். இத் திருமேனியில் சிவனார் வலது மேல்கையில் மழுவுள்ளது. கீழ்கை ரிஷபத்தின் நெற்றியைத் தொட்டுக் கொண்டும், வலதுகால் சற்றே வளைந்தும் காணப்படுகிறது. கிளியைப் பிடித்துக்கொண்டிருக்கும் உமையின் இடதுகை அழகிய கங்கணத்தினால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இடது பக்க இடையிலிருந்து தொங்கும் குஞ்சமும், காலில் அணிந்துள்ள சிலம்பும் காண்பவரை மயக்கும் நிலையில் உள்ளது. மேற்கண்ட சிறப்புமிக்க இவ்வர்த்தநாரி சிற்பம், தென்னாட்டில், குறிப்பாகச் சோழர்கள் காலத்தில் சிற்பிகள் எத்துணை அளவில் சிற்பக்கலையில் தேர்ச்சி பெற்றிருந்தார்கள் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

பிற்கால சோழர்களின் சிற்பக்கலை திறனுக்கு கும்பகோணத்திற்கு அருகில் உள்ள பழையாறை சோமதீஸ்வரர் ஆலயத்தில்உள்ள அர்த்தநாரி உருவமும் ஒரு சிறந்த உதாரணமாகும். இங்குள்ள உருவம் நான்கு கைகளைத் தாங்கி நிற்கிறது. சிவபிரானின் மேல்கை மழுவும், 'கீழ்கை அபயமுத்திரையுடனும் அருள் பாலிக்கிறது. பார்வதியின் மேல்கை தாமரை மலரைத்தாங்க, கீழ்கை ரிஷபத்தின் மேல் படிந்து காணப்படுகின்றது.

சோழர்கால சிற்பக்கலையின் முதிர்ந்த வளர்ச்சியும், அழகும், தெய்வீகத் தன்மையும் பின்வந்த சிற்பங்களில் குறைந்து கொண்டு போவதை உணரமுடிகிறது. சம்பிரதாயமான ஆடைகளும், அணிகளும் இருந்தும் சிற்பக்கலை சிறப்பாக இல்லை என்பதற்கு உதாரணமாக புதுக்கோட்டையில் உள்ள நாரத்தாமலை ஜம்புகேஸ்வரர் கோயில் அர்த்தநாரியைக் கூறலாம். இக்கோயிலில் இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் (கி.பி.1205) கட்டப்பட்டதாகும்.

அர்த்தநாரீஸ்வரரின் முக்கிய அம்சங்கள் அப்படியே இருந்தபோதிலும், கலைத்திறனில் காலத்திற்கேற்ற மாற்றத்தை பிற்கால நாயக்கர் காலத்தில் காணமுடிகிறது. சிற்பங்களின் தோரணை, கூர்மையான மூக்கு, ஆடை, அலங்காரம் என்று எல்லா வகையிலும் ஒரு மாற்றம் நிகழ்ந்த காலம் நாயக்கர் காலம் எனலாம்.

மேற்கூறிய அர்த்தநாரீஸ்வரரை, மாறுபட்ட கோணத்தில் திருச்செங்கோட்டிலும் தஞ்சைக்கு அருகாமையில் உள்ள கருத்தட்டாங்குடியிலும் காணலாம். கருத்தட்டாங் குடியில் காணப்படும் அர்த்தநாரி வித்தியாசமாக, வழக்கத்திற்கு மாறாக பார்வதி வலப்புறமாகவும், சிவன் இடப்புறமாகவும் மூன்று கைகளோடும் காணப்படுகிறார். வலதுகால் சற்றே வளைந்து அழகிய கோலத்தில் நிற்கும் இவ்வுருவமும் ஓர் அழகிய படைப்பாகும்.

# பரமநாடகம் பற்றிப் பல்லோர் பரவசம்

## —நடராசன் அடிமை—

எளியவர்களை உலகினர் என்றும் எள்ளி நகையாடுவர். தாய் தந்தையற்றவர்களைப் பற்றி உதாசீனமாகவே பேசுவர். இறைவன் (தாயுமிலி, தந்தைமிலி) தாய் தந்தையற்றவன் அல்லவா? இதை வைத்துக் கொண்டு காளமேகப் புலவர் ஒரு அழகான கற்பனையுடன் பாடினார்.

பாசுபதாஸ்திரம் பெற தவஞ்செய்த அருச்சுனன் வேட உருவில் வந்து இறைவனை இன்னார் என்று அறியாமல் வில்லால் அடித்தான். சாக்கிய நாயனார் பூசனை செய்வதான பாவனையில் இறைவன் மீது கற்களை எறிந்தார். பிட்டுக்கு மண் சுமந்த காலத்தில் பாண்டியன் பொற்பிரம்பால் முதுகில் அடித்தான். கண்ணப்ப நாயனார் தனது கண்ணைத் தோண்டி இறைவனது கண்ணில் அப்புவதற்கு அடையாளம் தெரிவதற்காகச் செருப்பு காலால் இறைவனின் திருமுகத்தில் உதைத்தார். ஐயோ பாவம் எம்பெருமான் சிவபெருமானுக்குத் தாய் தந்தை இல்லாததால் இவ்வளவு எளியவர் என ஆக்கிவிட்டார்களே! என நகைச்சுவையும் இரக்கமும் தோன்றப் பாடினார் காளமேகப் புலவர்.

வில்லாலடிக்கச் செருப்பால் உதைக்க;
வெகுண்டொருவன்
கல்லால் எறிய; பிரம்பால் அடிக்க:
இக்காசினியில்
அல்லார் பொழில் தில்லை அம்பலவாணர்க்கு
ஓர் அன்னைபிதா
இல்லாத தாழ்வல்லவோ இங்ஙனே
எளிதானதுவே.''

எனப் பாடினார்.

அற்புத மூர்த்தியான நடராசப் பெருமான் தன் கைப்படக் கடிதம் எழுதிய வரலாறு உண்டு. பஞ்சாட்சரப்படியேறி மாணிக்க வாசகப் பெருமானும், நந்தனாரும் நற்கதியடைந்தனர். இழிந்த குலத்தவனான பெத்தான் சாம்பான் என்பவனுக்குச் சிவதீட்சை செய்வித்து முத்தியடைய உதவுமாறு கொற்றவன் குடி உமாபதி சிவாசாரியாருக்கு

''அடியார்க்கு எளியன்; சிற்றம்பலவன்;
கொற்றங்
குடியார்க்கு எழுவியகைச்சீட்டு-படியின்மிசை
பெத்தான் சாம்பானுக்குப் பேதமற தீட்சை
செய்து
முத்தி கொடுக்க முறை''

எனச் சீட்டுக்கவி கொடுத்தனுப்பியதாக வரலாறு உண்டு. அது மட்டுமா? குரு நமச்சிவாயர் என்ற பெரியவர் பசியால் வருந்திச் சோறு வேண்ட அம்மை சிவகாமவல்லி சோறு கொண்டு வந்து

''கொண்டு வந்தேன் சோறு குகை நமச்
சிவாயரது
தொண்டர் அடியார் சுகிக்கவே-பண்டுகந்த
பேய்ச்சி முலையுண்ட பெருமான் உடன்பிறந்த
நாய்ச்சி சிவகாமி நான்''

எனத் தானே பாடியதாகவும் கூறுவர்.

தன்னை நினைத்தவர்களின் மனத்தைக் கோயிலாகக் கொண்டு அடியாருக்கு அருளும் அற்புத மூர்த்தியான நடராசப் பெருமாளைப் பற்றி மேலும் நிறைய எழுதலாம். தமிழ் மொழி மட்டுமன்று, வட மொழியிலும் நடராசப் பெருமானின் பெருமை மிக அழகாகக் கூறப்படுகின்றது.

நமக்கு ஒரு வருடம் என்பது தேவர்கட்கு ஒரு நாள். மார்கழி மாதத்தைத் தேவர்கட்கு விடியற்காலம் என்பர். நடராஜமூர்த்தி அபிடேகம் செய்து கொள்ளும் நாட்கள் வருமாறு:

மார்கழி—திருவாதிரை—விடியற்காலம்
மாசி—சுக்லசதுர்த்தி—காலசந்தி
சித்திரை—திருவோணம்—உச்சிக்காலம்
ஆனி—உத்திரம்—அந்திமாலை
ஆவணி—சுக்லசதுர்த்தசி—இரண்டாம் காலம்
புரட்டாசி—சுக்ல சதுர்த்தசி—அர்த்தஜாமம்

எனவே நடராசப் பெருமான் ஒரு நாளுக்கு ஆறுமுறை அபிடேகம் கொள்ளுகிறார். இச் செய்தியை :—

''சித்திரையில் ஓணம் முதல் சீர் ஆனி
உத்திரமாம்
சத்த தனு ஆதிரையும் சார்வாகும்—பத்தி
மாசியரி கன்னி கருவு சதுர்த்தசி மன்னும்
ஈசர் அபிடேக தினமாம்''.

என்று ஒரு பாடல் உண்டு. இதிலிருந்து நடராசப்பெருமான் ஒரு நாளைக்கு ஆறு முறை அபிடேகம் செய்து கொள்ளுகிறார் என அறிகிறோம்.

மார்கழி மாதம் திருவாதிரை நாளில் குளிர்ந்த இரவு நேரத்தில் சிதம்பரத்தில் தில்லை நாயகனான நடராசப்பெருமானுக்கு அபிடேகம் நடைபெறுவதைக் காண்கிறார் அப்பைய தீட்சதர் என்ற பெரியவர். பக்தர்கள் இறைவனைத் தாயாகவோ தந்தையாகவோ எண்ணுவதுடன் இருப்பதில்லை. சில சமயங்களில் இறைவன் ஒரு குழந்தை, தானே அக்குழந்தையின் தாய் என்ற எண்ணமும் ஏற்படுவதுண்டு. மதுரையில் நடனத் திருக்கோலத்தில் நின்ற பெருமானின் கால் வலிக்கும். ஒரே காலில் நிற்கின்றாரே எனப் பாண்டியன் இறைவனைக் கால்மாறியாடும்படி செய்த மாதிரி நம் ஸ்ரீ அப்பைய தீட்சிதருக்கும் ஒரு எண்ணம் தோன்றியது.



''பெருமானே! உன் சிரத்தில் குளிர்ந்த கங்கையையும் சந்திரனையும் வைத்துள்ளனை. உன் அருகிலுள்ள அம்மையோ பனியால் மூடிய மலையின் மகள். எனவே அவளும் குளிர்ந்திருப்பாள். இது போதாதென்று மார்கழி மாதத்திலே குளிர்ந்த சந்தனம் கொண்டு உமக்கு அபிடேகம் செய்கின்றார்களே! இவ்வளவு குளிரை எவ்வாறு தாங்குவாய்? ஐயனே! குளிரால் உனக்கு ஏற்படும் துன்பம் நீங்க, ஒரு வழி உள்ளது. என் இதயத்திலே ஆசை கோபம் போன்ற கெட்ட குணங்களான நெருப்பு உள்ளது. என் இதயத்தில் நீ வசித்தால் குளிரால் ஏற்படும் துன்பம் நீங்கி விடும்! எனவே அடியேன் மனத்தில் வந்து வசித்தருள்க!'' என நயம்படத் தன் மனத்தில் குடிகொள்ளுமாறு இறைவனை அழைக்கின்றார். வடமொழியிலும் இம்மாதிரி பக்தி நிறைந்த கருத்துக்கள் உள்ள சுலோகங்கள் உள்ளன. பெரியோர்களிடம் கேட்டு உணர்ந்து இன்புறலாம்.

சிதம்பரத் திருக்கோயில் ஒரு உத்தம யோகியின் இதயதாமரை போன்றது. இறையருள் பூரணமாக நிறைந்த இடம் என அறிதல் வேண்டும். திருச்சிற்றம்பலம் என்னும் மகா சபையில் பிரம்மா, விஷ்ணு, சிவன், மகேஸ்வரன் சதாசிவன் ஆகியவர்களுக்கு ஐந்து பீடங்கள் உள்ளன. உள்ளே செல்ல ஐந்தெழுத்துக்களாலான (பஞ்சாட்சர) படிகள் உள்ளன. அங்குள்ள கதவு அவித்தை எனப்படும். தொண்ணூற்றாறு தத்துவங்களும் தொண்ணூற்றாறு சன்னல் துவாரங்களாகக் காணப்படுகின்றன. நடுவிலுள்ள நான்கு தங்க கம்பங்கள் நான்கு வேதங்களைக் குறிக்கும். சுற்றியுள்ள இருபத்தெட்டு மரக்கம்பங்கள் இருபத்தெட்டு ஆகமங்களைக் குறிக்கும். இவ்விடத்தை சுத்தவித்தை என்பர்.

சிவகாமவல்லியுடன் நடராசப் பெருமான் அமர்ந்துள்ள பீடத்தைப் பிரணவ பீடம் என்பர். இதன் பின்னே ''உலகெல்லாம் உணர்ந்து ஓதற்கு அரிய'' திருச்சிற்றம்பலம்'' எனப் பெரியோரால் அழைக்கப்படுவதான சிவவொளியான சிதாகாசம் விளங்குகின்றது. திரையை நீக்கி, நமக்குத் தரிசனம் காட்டும்போது தங்க வில்வதளங்கள் தொங்கும் உருவமற்ற ஆகாயத்தைக் கற்பூர ஒளியில் காட்டி, திரையைப் போட்டு, உருவத் திருமேனியான நடராசப் பெருமானை தரிசிக்க வைக்கின்றார்கள். உருவமற்ற இறைவனின் தன்மையை தரிசிப்பதுதான் சிதம்பர ரகசியம் என அழைத்து வணங்கப் பெறுகிறது.

இவ்விமானத்தின் மீதுள்ள ஒன்பது கும்பங்களும் ஒன்பது சக்திகளாகும். விமானத்திலுள்ள கைமரங்களை 64 கலைகள் என்பர். செப்பு ஓடுகள் 21600 மனிதன் ஒவ்வொரு நாளும் விடும் சுவாசம். சுவாசத்திற்கு ஆதாரமான 72000 நாடிகளும் ஆணிகள் எனக் கூறுவர். இதுவே திருச்சிற்றம்பலத்தின் ரகசியம்.

மூர்த்தி, தீர்த்தம், தலமாகிய மூன்று சிறப்புக்களும் பெற்ற இங்கு இறைவன் சிவகாமவல்லி சமேத நடராஜ மூர்த்தியென்ற திருமேனியுடனும், உருவமற்ற ஆகாயமாகவும் (அம்பரம்) காட்சி தருகின்றார். இத்தகைய அம்மையப்பர்களான நடராசப் பெருமானைத் தில்லையில் கண்டு களித்து அப்பெருமானின் அருள் பெற்று பேரானந்தப் பெருவாழ்வு வாழ அப்பெருமானது குஞ்சிதபாதத்தை வணங்கி வாழ்வோம்.

# வைணவக் கோவிலில் சிவராத்திரி திருவிழா

எஸ். பி. ராஜகுமாரி, பி.ஏ., பி.எல்.

சிவனுக்குகந்த சிவராத்திரிக்கு எங்கள் குடும்பத்தினர் ஏதேனும் ஓர் கோவிலுக்குச் சென்று வருவது வழக்கம். இந்த வருடம் எந்த கோவிலுக்குச் செல்வது என்று ஆலோசித்த போது சென்றாய மலைக்குச் சென்று வரலாம் என்று என் தாயார் கூறினார். ஏனெனில் அது அவரது பிறந்தகத்துக்கு அருகாமையில் இருப்பதாகும். நானும் சரி என்றேன்.

இம்மலை தருமபுரி மாவட்டத்தில் ஊத்தங்கரைக்கு அருகாமையில் சாலமரத்துப்பட்டி என்ற ஊரில் இருக்கிறது. சிவராத்திரி அன்று சிறப்பு பேருந்துகள் செல்வதால் நாங்களும் சிரமமின்றி அவ்வூரைச் சென்றடைந்தோம். சாலையிலிருந்து கோயிலுக்குச் செல்லும்பாதை பேருந்துகள் செல்வதற்கு வசதியாக இல்லாததால் சிறிது தூரம் நடக்க வேண்டி இருந்தது. தங்குவதற்கு அறைகள் இல்லாத காரணத்தால் (சிவராத்திரிக்கு இரவு முழுவதும் விழித்திருக்க வேண்டும் என்பதற்காகவே அங்கு தங்கும் அறைகள் இல்லை போலும்) அங்கிருந்த கடை ஒன்றில் எங்கள் சாமான்களை வைத்துவிட்டு மலைமீது ஏறத் தொடங்கினோம்.

சென்னை வாசியான எனக்கு மலையேறுவதில் ஒரு ஆர்வம். விரைவிலேயே மலை உச்சியை அடைந்துவிட்டோம். மூலஸ்தான மண்டபத்திற்குள் சென்றோம். அங்கிருந்த மூர்த்தியை தரிசித்தபோது மூலவர் மீது புஷ்பங்களை அதிகமாக சாற்றி இருந்ததால் லிங்கம் மறைந்து காணப்படுகிறது என்று நினைத்தேன். அங்கு வந்தவர்கள் கோவிந்தா, கோவிந்தா என்று கூவியபடி உள்ளே வந்தனர். அர்ச்சகரும் அனைவருக்கும் துளசிதல தீர்த்தத்தை அளித்து சடாரியை வைத்தபோது சிவன் கோவிலில் சடாரியா என்று ஆச்சரியப்பட்டேன். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. என் தாயாரிடம் கேட்டபோது "இது பெருமாள் கோவில் தானே! சிவன் கோவில் என்று உனக்கு யார் சொன்னார்கள்" என்றார்.

வைணவக் கோவிலில் சிவராத்திரி திருவிழாவா, என்று அதிசயித்தேன். மேலும் விவாமறிய ஆவலுற்ற போது கீழ்க்காணும் விவரங்கள் கிடைத்தன. இங்குள்ள இறைவனுக்கு சென்றாய பெருமாள் என்றும் இறைவிக்கு துளசி அம்மாள் என்றும் பெயர். யாதவர் குலத்தினர் இங்கு அர்ச்சகராக இருக்கின்றனர். சனிக்கிழமை தோறும் பூஜை நடக்கிறது. வேறு நாட்களில் பூஜை செய்ய வேண்டுமென்றால் அர்ச்சகரின் வீட்டிற்கு சென்று அழைத்துவர வேண்டும். வருடத்தில் சிவராத்திரி தினத்தை மட்டும் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றனர். மக்கள் இரவு முழுவதும் கண்விழித்திருந்து, மறுநாள் காலை 6 மணிக்கு இழுக்கப்படும் தேரைக் காணக் காத்திருந்தனர். அத்தேரின் மீது மிளகு, உப்பு, ஆகியவற்றை இறைக்கிறார்கள். மரு உள்ளவர்கள் அம்மரு உதிர்ந்துவிடவும், குழந்தை இல்லாதவர்கள் குழந்தை வேண்டியும், பிரார்த்தித்துக்கொண்டு பலன் கிடைத்தவுடன் மிளகு, உப்பு போன்றவற்றை தேரின் மீது இறைக்கின்றனராம். அதோடு விவசாயிகள் தங்கள் நிலத்தில் விளைந்த தானியங்களையும் தேரின் மீது இறைக்கின்றனர்.

வைணவக் கோயிலில் சிவராத்திரி விழா சிறப்புறநடக்கும்விபரமறிய கோயில் அர்ச்சகர் சி.பாலதாசரி அவர்களைச் சந்தித்தேன். அவர் கூறியதாவது: பெல்லாரியிலிருந்த யாதவர் குலத்துப் பெண்ணை நவாப் ஒருவர் திருமணம் செய்ய விரும்பிப்பெண் கேட்டார். மறுக்க இயலாத காரணத்தால் சரி என்று கூறிக் கல்யாண ஏற்பாடு செய்யச் சொல்லிவிட்டு அலங்கரித்த பந்தலில் ஒரு கறுப்பு நாயை கட்டிவிட்டு யாதவர் குலத்தவர் அனைவரும் ஊரைவிட்டே கிளம்பி விட்டனர். அவர்கள் இறைவனை வேண்டி ஆற்றின் அக்கரைக்குக் தம்மைக் கொண்டு சேர்க்கும்படி வேண்டினர். ஆற்றின் நடுவே சாய்ந்திருந்த ஒரு மரத்தின் உதவியால் யாதவர் குலத்தினர் ஆற்றைக் கடந்துவிட்டனர். இவர்களைத் துரத்தி வந்தபடை வீரர்கள், ஆற்றை அடைந்தபோது அம்மரம் நிமிர்ந்துவிட்டிருந்தபடியால் அவர்களால் ஆற்றைக் கடக்க முடியவில்லை. அவ்வாறு ஆற்றைக் கடந்து வந்த யாதவர்கள் மருகாபுரி பட்டணத்திலும் துவாரகாபுரி பட்டணத்திலும் தங்கி காடுவெட்டி ஆடுமாடு வளர்த்துக் கொண்டு வாழ்ந்து வந்தனராம். அந்நாளில் ஒருவர் கிழங்கு தோண்டும் போது ஒரு கல்லில்ரத்தம் பீறிட்டு எழப்பயந்து அவர்

இறந்துவிட்டார். அவரைத் தேடி வந்த அவர் மனைவி நடந்ததை அறிந்து வருந்தினாள். அப்போது ஒரு பெண்மணி தான் பெல்லாரியிலிருந்து வந்தபோது தன் கூடையில் ஒரு கல் இருந்ததாகவும் அதை எடுத்து பலமுறை வெளியே போட்ட போதும் மீண்டும், மீண்டும் தன் கூடையிலேயே இருந்ததாகவும் இறுதியில் இந்த இடத்தில் தூக்கிப்போட்டதாகவும் அந்தக் கல்தான் இது என்றும் கூறினாராம். தெய்வசக்தியை அறிந்த மக்கள் அங்கு பூஜை நடத்த ஆரம்பித்தனர். மருகாபுரி பட்டணத்தில் வசித்துவந்த மணியக்காரர் ஒருவருக்கு குழந்தை இல்லாமல் இருந்தது. இறைவன் அவர் கனவில்தோன்றித் தான் மழை வெயிலில் இருப்பதாகவும் இவ்விடத்தில் கோயில் கட்டினால் அவருக்கு குழந்தை பிறக்கும் என்றும் கூற, அவரும்மலையில்தற்போதுள்ள கோயிலை கட்டினார். அவர் சைவ சமயத்தை சார்ந்தவராக இருந்ததால் விநாயகர் மற்றும் முருகருடைய விக்ரகங்களையும் பிரதிஷ்டைசெய்தார். இடையில் யாதவர் குலப் பூசாரிக்கும் மணியக்காரருக்கும் எவ்வாறு, யார், பூஜை செய்வது என்பது குறித்து தகராறு ஏற்பட்டது. பந்தயப்படி குதிரை ஒரு குறிப்பிட்ட கிணற்றை தாண்டிவிட்டதால் இறைவனுக்கு நாமம் சார்த்தவும், அது வைணவக் கோயில்தான் என்றும் மணியக்காரர் ஒப்புக்கொண்டார். ஆயினும் சிவபக்தராகிய அவருடைய வேண்டுகோளுக்கிணங்க சிவராத்திரி தினத்தை விமரிசையாக கொண்டாட ஒப்புக் கொண்டனர். எனவேதான் தற்போதும் சிவராத்திரி தினம் இங்கு கோலாகலமாக கொண்டாடப்படுகிறது. தற்போதும் யாதவர் குலத்தினரே அர்ச்சகராக இருக்கின்றனர்.

# மனிதனும் தெய்வமாகலாம்



''கடவுள் வாழ்த்து'' அதிகாரத்தில் எழுத்துக்களுக்கு அகரம் முதல் என்பது போல உலகிற்கு ஆதிபகவான் அடிப்படை என்றார்.

''வாலறிவன்'' என்றால் தூய்மையான அறிவு வடிவமாக விளங்கக் கூடியவன் எனக்கூறி, அவன் திருவடிகளைத் தொழாவிட்டால் கற்றும் பயனில்லை என்று சுட்டிக் காட்டினார்.

''வேண்டுதல் வேண்டாமை இலான்'' - அதாவது விருப்பு வெறுப்பு இல்லாதவனுடைய நிழலை நாடுபவர்க்குத் துன்பம் இல்லையென்று குறிப்பிட்டார்.

''தனக்குவமை இல்லாதான்''

''அறவாழி அந்தணன்''

இவ்வாறெல்லாம் கடவுள் எனப்படும் சொல்லுக்கு இலக்கணம் வகுத்தார். இறைவனுக்கு உரிய இத்தனை பெருமையும் கொண்டுஒருவன் வையத்தில் வாழவேண்டுமென்று வள்ளுவர் கருதினார். அதனால்தான் அவர் திட்டவட்டமாக ஒரு கருத்தை உலகிற்கு அறிவித்தார்.

> ''தெய்வத்திற்கென எத்தனையோ அருங்குணங்கள் சொல்லப்படுகின்றன. உலகில் வாழவேண்டிய அறநெறியில் நின்று வாழ்கிறவன் வானத்தில் வாழ்வதாகச் சொல்லப்படும் தெய்வத்துக்கு இணையாக வைத்து மதிக்கப்படுவான்''.

அதற்கு இதோ குறள்:

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்''.

# கந்தவேள் கருணை



டாக்டர் திருமுருக கிருபானந்த வாரியார்

## [37]

அன்றிரவு நீங்கியது. கதிரவன் கதிர்களை வீசி இருளை நீக்கி ஒளியைப் பெய்தான். பானுகோபன் தன் காலைக்கடன்களை முடித்துக் கொண்டான். தனது பாட்டியாகிய மாயாதேவியை நினைந்து வேண்டினான். மாயை அந்தக் கணமே அவன் முன் தோன்றி, ''குழந்தாய்! என்னை அழைத்த காரணம் என்ன?'' என்றாள்.

''பாட்டி! நான் நால்வகைச் சேனைகளுடன் சென்று போரிட்டும் முருகனின் தூதனிடம் வலிமை குன்றித் திரும்பிவிட்டேன். அதனால் எனக்குப் பெரும் அவமானம் நேர்ந்ததோடு மாறாக பழியும் நேர்ந்தது. பாட்டி! என்னோடு போர் செய்து வெற்றி பெற்ற பகைவர்களை இன்று நான் வெல்லுவதற்குப் படை தந்தருள்க'' என்று பானுகோபன் வேண்டிக் கொண்டான்.

மாயாதேவி ஒரு மாயப் படைக்கலத்தை உண்டாக்கிப் பானுகோபன் கையில் கொடுத்தான். ''பௌத்திரா! இப்படைக்கலம் பகைவர்களின் அறிவை மயக்கும். இதனை விடுத்தால் வெற்றி உனக்கே'' என்று கூறி மீண்டாள்.

பானுகோபன் மிகவும் மகிழ்ந்து போர்க் கோலம் பூண்டு தேரில் ஏறிப் புறப்பட்டான். அளவற்ற தெய்வாஸ்திரங்களையும் அவன் கொண்டு சென்றான். அவனுடன் நாற்பதினாயிரம் வெள்ளம் சேனைகள் சென்றன.

மதிற்புறத்தை அடைந்த அசுர ராஜகுமாரன் ஆயிரங்குதிரை முகங்களைக்கொண்ட ஒரு தூதனை அழைத்து, ''நீ சிவகுமாரனின் பாசறைக்குச் செல்வாய். வீரவாகு தேவரிடம் இன்றைய யுத்தத்தில் உனது உயிரைக் கவருவதற்காகப் பானுகோபன் வந்திருக்கிறான். உடனே விரைந்து போருக்குப் புறப்படு என்று தூது சொல்லி வா'' என்று கூறி அனுப்பினான்.

வீரவாகுதேவர், தூதன் சொன்னதைக் கேட்டுச் சிரித்தார். ''பானுகோபன் உயிரைக்

கவருவதற்காக நான் இதோ வருகிறேன் என்று அவனிடம் போய்ச் சொல்'' என்று கூறினார். பின்னர் துணைவர்கள் சூழக் கந்தக் கடவுளை அணுகி அவரது திருவடிகளை வணங்கி நின்றார். ''பானுகோபன் மாயை செய்தால் என் வேல் வந்து துணை செய்யும்'' என்று அருளி அவர்களுக்கு விடை தந்து அனுப்பினார் ஆறுமுகன். (மாயைதனை அழிக்கும் ஞானத்தின் உருவேயன்றோ வேலாயுதம்?)

பூத சேனைகளும் அவுண சேனைகளும் மோதின. அப்போரில் பூதர்கள் சிலரும் அவுணர்கள் பலரும் இறந்தனர். அன்று வீரவாகுவுக்கும் பானுகோபனுக்குமிடையே அற்புதமான போர் நடைபெற்றது. பானுகோபன் சீறியெழுந்து வருணப் படையை விடுத்தான். அது ஊழிக் காலத்துக்கடல் வெள்ளம் போல் பரந்து விரைந்தது. வீரவாகுதேவர் அதற்கு எதிராக அக்கினிப் படையை விடுத்தார். அந்தப் படையிலிருந்து புகையும்பொறியும் எழுந்து அண்டங்கள் வெடித்தன. கங்கை வற்றியது. கடல்கள் சுருங்கி மலைகள் வெடித்து நிலம் பிளந்தது. அக்கினிப் படை உலகம் எல்லாம் எரிய வந்து பானுகோபனின் வருணப் படையை வற்றச் செய்து விழுங்கியது. பானுகோபன் வாயுப்படையை விடுத்தான். யுகாந்த மாருதம்போல் சீறிச் சென்ற அந்தப் படை அக்கினிப்படையை அணைத்துப் பூதப் படைகளைக் கொல்ல வந்தது. வீரவாகுதேவர் நாகப்படையைவிடுத்தார். அந்தப்படை அளவற்ற பாம்புகளின் கூட்டமாய்ச் சென்று, வாயுப் படையை உண்டது. பானுகோபன் கருடப் படையை விடுத்தான். அதனால் நாகப்படை அழிந்தது. கோபமுள்ள வீரவாகு தேவர் நந்திப்படையை ஏவினார். அந்தப் படை எண்ணற்ற இடபங்களின் உருவுடன் அண்டங்கள் அதிர ஆரவாரம் செய்து சென்று கருடப் படையை அழித்தது. பானுகோபன் இயமப் படையை விடுத்தான். நந்திப் படை அதனையும் அழித்தது. நந்திப்படையின் ஆற்றலைக் கண்ட பானுகோபன் பிரமப் படையை விடுத்தான். அந்தப் படையும் நந்தி படையைக் கண்டு வணங்கிச் சென்றது. பானுகோபன் விஷ்ணுப் படையை ஏவினான். அது நந்திப் படையுடன் போர் புரிந்து கொண்டிருந்தபோது வீரவாகு தேவர் வீரபத்திரப் படையைச் செலுத்தினார். வீரபத்திரப்படை விஷ்ணுப் படையை அழித்தது. அதனைக் கண்ட பானுகோபன் சிவப்படையை எடுத்து வழிபட்டு விடுத்தான். உடனே வீரவாகு தேவரும் சிவப் படையைப் பூசித்து விடுத்தார். இரு படைக்கலங்களும் ஊழிக்காற்றையும், தீயையும், நஞ்சையும், நீரையும், காளிக் கூட்டங்களையும் காலர் கூட்டங்களையும் உண்டாக்கி கொண்டு எங்கும் போர் செய்தன. உருத்திர கணங்களும் தோன்றிப் போர் செய்தனர். பலவிதமான ஆயுதங்களும் மழைபோல் பொழிந்தன. மேரு மலை துகளாயிற்று. கடல் வற்றியது; உயிர்கள் யாவும் துடித்து உலைந்தன. குலமலைகள் குலைந்தன; அச்சத்தினால் பூதேவியும், சீதேவியும் திருமாலைத் தழுவி கொண்டார்கள். தேவர்கள் நிலைதடுமாறி ஓட பானுகோபனுடன் வந்த சேனைகள் விலகாமல் நின்று யுத்த சக்தி தாங்க முடியாமல் அழிந்தன.

பானுகோபன் ஒருவனே உயிர் பிழைத்து நின்றான். ''ஊழிக் காலம் இது தானோ?'' என்று அஞ்சி நின்றான்.

வீரமகேந்திரபுரி அஞ்சி நடுங்குவதைக் கண்ட சூரபன்மன், ''இவ்வாறு நிகழ்வதற்கு என்ன காரணம்?'' என்று அறிந்து வருமாறு தூதர்களை அனுப்பி நடந்தவற்றை அறிந்தான். 'பானுகோபன் சிவப்படையை விடுத்தும் வீரவாகுவை வெற்றி கொள்ள முடியவில்லை?' என்ற ஆச்சரியமும் ஆத்திரமும் ஒருங்கே அடைந்தான்.

இரு சிவப் படைக்கலங்களும் தமது வலிமையைச் சுருக்கிக்கொண்டு தம்மால் அழிந்த மலை, கடல், அண்டங்கள் முதலியவற்றை முன்போல் நிலை நிறுத்தித் தம்மைச் செலுத்தியவர்களிடமே மீண்டும் சென்றன. அழிக்கவும் ஆக்கவும் ஆற்றல் பெற்ற ஆயுதம் அல்லவா அது?

வீரவாகுதேவருடன் செய்த யுத்தத்தில், உடன் வந்த சேனைகளையெல்லாம் இழந்து தனித்து நின்றான் பானுகோபன். 'தனியொருவனாக வீரவாகு தேவருடன் போர் செய்தால் தான் இறப்பது உறுதி. ஆகவே, இனி யுத்த களத்தில் நிற்பதும் சரியன்று.' என்று அஞ்சி வானில் மறைந்து நின்றான். அவன் மறைந்தோடியதைக் கண்ட பூத சேனைகள் 'பானுகோபன் தோற்றுவிட்டான்' என்று ஆரவாரம் செய்தன. அப்போது பொழுது சாய்ந்துவிட்டது. பூதப் படைகள் யாவும் பாசறைக்குத் திரும்பின.

வானில் மறைந்து நின்ற பானுகோபன், ''இன்றும் நான் தோல்வியுடன் திரும்பினால் நம் புகழ் அடியோடு அழியும். ஆகவே, பகைவரை எப்படியேனும் வெல்ல வேண்டும். வீரவாகுவுக்கு எதிரே நின்று போர் செய்து வெற்றி கொள்ள முடியாது. எனவே, தந்திரத்தினால் தான் வெல்ல வேண்டும்' என்று எண்ணினான். தனது பாட்டி மாயாதேவி கொடுத்த மாயப் படைக்கலத்தை எடுத்து வழிபட்டு. ''நீ ஒருவரும் அறியாவண்ணம் சென்று பகைவர்கள் உயிரையும் உணர்வையும் கெடுத்து நன்னீர்க் கடலில் எறிவாய்'' என்று சொல்லி விடுத்தான்.

வானிலிருந்து பானுகோபன் மாயப்படையைச் செலுத்தினான். அது யாரும் அறியா வண்ணம் பூமியை வந்தடைந்தது. பூத சேனைகளின் அறிவை மயக்கியது. ஆயினும் எம்பிரானின் அருள் பெற்ற அவர்களின் உயிரைக் கவர அதனால் முடியவில்லை. மாயப்படை ஊழிக் காற்றின் வடிவெடுத்து ஆலகால விஷம்போல் பாய்ந்தது. வீரவாகுதேவர் முதலிய அனைவரையும் விண் வழியே எடுத்துச் சென்று ஆறுகளையும் கடல்களையும் கடந்து நன்னீர்க் கடலில் அவர்களை அழுத்தியது; அவர்கள் அங்கிருந்து வெளியே கிளம்பாதபடி தடுத்தது.

அதனைக் கண்ட பானுகோபன் மகிழ்ச்சிப் பெருக்கினால் ஜயசங்கம் ஊதினான். விண் வழியாக விரைந்து வீரமகேந்திரம் சென்றான். சூரபன்மனைப் பணிந்து, ''இன்று நான் பல

வாறாகப் போரர்டி வீரவாகுவையும், இலக்கத் தெண்மரையும் ஆயிரம் வெள்ளம் பூத சேனைகளையும் கொன்று வென்றேன். அவர்களது உடல்களை நன்னீர் கடலில் இட்டேன். அப்பா! இனி நீங்கள் வருத்தப்படவேண்டாம்: நான் படைகளோடு நாளை சென்று ஆறுமுகனை வென்று, மால் அயன், இந்திரன் முதலியோரை பிடித்துக்கொண்டு வருகிறேன்.'' என்றான்.

பானுகோபன் கூறியதைக் கேட்ட சூரபன்மன் உளம் உவந்து மகனைத் தழுவிக்கொண்டான். 'மகனே! ஒரு மகன் தந்தைக்குச் செய்ய வேண்டியதை நீ செய்துவிட்டாய். உன்னால் நம் குலம் உயர்ந்தது. இனி நமக்கு ஒருகுறையுமில்லை. நீ கூறியபடியே நாளை காலை சென்று முருகனை வென்று பிரமாதி தேவரைப் பிடித்துக் கொண்டு வா என்று கூறிப் புதிய அணிகலன்களை அணிவித்து வாழ்த்தி அனுப்பினான். பானுகோபன் தன் அரண்மனைக்கு வந்து அளவிலா மகிழ்ச்சியோடிருந்தான். வீரமகேந்திரபுரி முழுவதும் அன்றிரவு ஒரே களியாட்டம். வெற்றிக் கொண்டாட்டம்.

பானுகோபனின் மாயப் படையால் வீரவாகுதேவர் முதலியோர் நன்னீர்க் கடலில் அழுந்திவிட்டதைக் கண்டு தேவர்கள் பதைத்தோடினர். நாரத மகரிஷி முருகப்பெருமானிடம் தேவர்களுக்கு முன்னே விரைந்தோடி விஷயத்தைத் தெரிவித்தார்.

கந்தவேள் தமது வேற் படையை நோக்கினார். ''நீ நன்னீர்க்கடலுக்குப் போய் அங்கிருக்கிற மாயப் படைகளை அழித்து, வீரவாகு முதலியோர் மயக்கத்தை நீக்கி அவர்களை இங்கே அழைத்து வா'' என்று பணித்து வேலை விடுவித்தருளினார் விமலர்.

''கங்கை அன்னதோர் வாலிதா கியபுனற்
கடற்போய்
அங்கண் வைகிய மாயாமாப் படையினை
அழித்து
வெங்கண் வீரர்மால் அகற்றியே அனையவர்
விரைவில்
இங்குவந்திடத் தந்துநீசெல்கெனஇசைத்தான்''

வேற்படை ஆயிரம் கோடி சூரிய ஒளி போல் புறப்பட்டது. அந்தப் படையுடன் வருணன், வாயு, இந்திரன், அயன் அரி இவர்களின் படைகள் சேவித்துக் கொண்டு உடன் சென்றன. வேற்படை ஆறுகளையும் ஏழு கடல்களையும் கடந்து நன்னீர்க்கடலை அடைந்தது. வேலை வணங்கி, 'மாயப் படையை வெல்லும் திறனின்றி நான் செயலற்றிருக்கிறனே.யன்றிப் பூதப் படைகளுக்குப் பிழையேதும் செய்யவில்லை'' என்று கூறித் தொழுதான். வேற்படை கடலரசனுக்கு அருள் செய்தது. கடலில் ஆழ்ந்து கிடந்த அனைவருக்கும் வெகு எளிதில் உணர்ச்சி தந்தது. அவ்வளவில் மாயப்படை தானாகவே அழிந்தது. ஒளி வந்தால் இருள் தானாகவே ஓடிட வேண்டியதுதானே? தீபத்தை எடுத்து வருபவர் இருளை நோக்கிப் 'போ' எனப் பிடித்துத் தள்ள வேண்டியதில்லையே!

நன்னீர்க்கடலில் ஆழ்ந்திருந்த வீரவாகு முதலியோர் எழுந்து கடலுக்கு மேல் வந்தனர். கரையற்ற கருணைக் கடலைப் பெருக்கிய கந்தவேளைத் தியானித்து நின்றனர். வேற்படையை வணங்கித் துதித்தனர்.

''அந்தமில் ஒளியின் சீரால் அறுமுகம் படைத்த
பண்பால்
எந்தைகண் நின்றும் வந்த இயற்கையால்
சத்தியாம்பேர்
தந்திடும் பனுவல் பெற்ற தன்மையால்
தனிவேற்பெம்மான்
கந்தனே என்ன நின்னைக் கண்டுளக் கவலை
தீர்ந்தேம்''.

''முடிவில்லாத ஒளியின் சிறப்பாலும், ஆறுமுகங்களையுடையதாலும் எம்பெருமானிடத்தினின்றும் உதித்தபடியாலும், சக்தி என்ற ஒப்பற்ற பேரைப் பெற்றதனாலும் வேலாயுதமே! உன்னை என்றும் கந்தவேலாகவே கண்டு எமது உள்ளக் கவலை தீர்ந்தோம்''. எனப்போற்றி வணங்கியபடியே வேற்படைக்குப் பின்னால் சென்றனர். வேல், முருகப்பெருமானின் திருக்கரத்தில் வந்தமர்ந்தது. (தொடரும்)




மாதந்தோறும் மலரும் மாறுபட்ட பல பகுதிகள், மனத்திற்கினிய கருத்துக்கள்; மனதில் இருத்த நற்குறிப்புக்கள் அனைத்தும் தாங்கி வருவது திருக்கோயில். கம்பனின் காவியமும் கந்தவேளின் கருணையும் கற்கண்டு சுவை தனையே மிக கூட்டும்.

கம்பனின் காவியம், 'கவியின்பம், கருத்தின்பம் இரண்டும் அளவோடு கூட்டி அழகுடன் படைக்கும் தாங்கள் அன்புகூர்ந்து என்னுடைய சிறிய விண்ணபத்தை பரிசீலனை செய்து எனது அவாவினைத் தணிக்க வேண்டுகிறேன். கம்பன் காவியத்தில் இராமன், இலக்குவன் இவர்களுடைய பாத்திரம் சீதை மற்றும் இராவணன் போன்றோருடைய பாத்திரம் வெகு உன்னிப்பாக பேசப்படுகிறது. ஆனால் பரதன், சத்ருக்கனன் இவர்களுடைய பாத்திரம் ஓரளவே அவர்களுடைய பெருமையை பற்றி பேசப்படுகிறது. இதன் காரணம் என்ன? பரதன், சத்ருக்கனன் இவர்களுடைய சிறப்பான போற்றுதற்குரிய குணங்களை தாங்கள் வரும் தொடர்களில் எடுத்துக் கூறி மகிழ்விக்க வேண்டுகிறேன்.

—என். சூரிய நாராயணன், சிதம்பரம்

# சோழநாட்டு வைணவத் திருத்தலங்கள்

**நித்திலக்கோ**

**(முன் தொடர்ச்சி)**

### 11. சிறுபுலியூர்

அருள்மாகடல்—திருமாமகள்

கருமாமுகி லுருவா! கன லுருவா! புனலுருவா
பெருமால்வரை யுருவா! பிற வுருவா! நின துருவா
திருமாமகள் மருவும்சிறு புலியூர்ச்சல சயனத்து
அருமா கட லமுதே! உன தடியே சரணாமே!

—பெரிய திருமொழி

மயிலாடுதுறை-காரைக்குடி இருப்புப் பாதையில் உள்ள மங்கை நல்லூர் இரயில் நிலையத்திலிருந்து மூன்று கல் தொலைவில் இருக்கிறது. பேரளத்திலிருந்தும் மூன்று கல் தான்.

திருமங்கை யாழ்வாரின் ஒரு திருமொழி யினைப் பெற்ற புஜங்க சயனர் இவர். கடல் மல்லைத் தலசயனம்; சிறுபுலியூர் சலசயனம். இப்பெருமாள்—நாச்சியாரின் வடமொழிப் பெயர்கள்; கிருபாசமுத்திரர்; தயாநாயகி.

### 12. திருச்சேறை

சாரநாதன்—சாரநாயகி

கள்ளத்தேன்; பொய்யகத்தேன்; ஆதலால்,
டோதருகால் கவலை என்னும்,
வெள்ளத்தேற் கென்கொலோ? விளைவயலுள்
கருநீலம், களைஞர் தாளால்
தள்ளத்தேன் மணநாறும் தண்சேறை
எம்பெருமான் தாளை, நாளும்
உள்ளத்தே வைப்பாருக்(கு) இது காணீர்,
என்னுள்ளம் உருகு மாறே!

—பெரிய திருமொழி

மூர்த்தி, தீர்த்தம், நாச்சியார், விமானத் திருப்பெயர்கள் சாரமாகையால் இது பஞ்ச ஸார ஷேத்திரம்.

வலப்பக்கம் மார்க்கண்டேயரும், இடப் பக்கம் காவிரியும்கூடிய கம்பீரமான பெருமாள்.

இக்கோயிலின் இரண்டாவது பிரகாரத் தில் இராசகோபாலன் சந்நிதி உள்ளது. தஞ்சை மன்னரும், அமைச்சருமாக ஒரே நேரத்தில் இக்கோயிலையும், மன்னார்க்குடிக் கோயிலையும் கட்டியதாகக் கர்ணபரம்பரைக் கதை கூறுகிறது. காவிரி தவம் செய்து, கங்கை யினும் புனிதம் பெற்ற இடம் இது.

திருமங்கை மன்னரின் 13 பாசுரங்களைப் பெற்றது. இவ்வூரில் தைப்பூச உற்சவம் உண்டு.

கும்பகோணம்-திருவாரூர் நெடுஞ்சாலை யில், கும்பகோணத்தினின்றும் ஒன்பது கல் தொலைவு.

இத்தலத்தில் தேவாரக் கோவிலும் இருக் கின்றது.

### 13. தலைச்சங்க நாண்மதியம்

(தலைச்சங்காடு)

நாண்மதியப் பெருமாள், வெண் சுடர்ப் பெரு மாள், தலைச்சங்க நாச்சியார், செங்கமல வல்லி

கண்ணார் கண்ணபுரம், கடிகை, கடிகமழும்,
கண்ணார் தாமரைசூழ் தலைச்சங்க
மேல்திசையுள்,
விண்ணோர் நாண்மதியை, விரிகின்ற
வெண்சுடரை,
கண்ணாரக் கண்டுகொண்டு களிக்கின்ற திங்கு
என்று கொலோ!

—பெரியதிருமொழி.

சீர்காழி—தரங்கம்பாடி நெடுஞ்சாலையில் 10 கல் தொலைவில் இருக்கிறது. காவிரியாற் றின் தென்கரையில் இக்கோயில் இலங்குகிறது. இக்கோயிலுக்குக் கிழக்கே தேவாரம் பெற்ற சிவன் கோயில் உள்ளது.

திருமங்கையாழ்வாரின் இரு பாசுரங் களைப் பெற்ற வைப்புத்தலம்.

### 14. திருக்குடந்தை (கும்பகோணம்)

சாரங்கபாணிப் பெருமாள், (ஆராவமுது) கோமளவல்லி

ஆரா அமுதே! அடியேன் உடலம்
நின்பால் அன்பாயே
நீராய்அலைந்து கரைய உருக்கு
கின்ற நெடுமாலே
சீரார் செந்நெல் கவரி வீசும்
செழுநீர்த் திருக் குடந்தை
ஏரார் கோலம் திகழக் கிடந்தாய்!
கண்டேன் எம்மானே!

—திருவாய்மொழி.

(உடலம்—உடம்பு. சரீரம்; கவரி வீசும்- சாமரையைப் போல் நெற்பயிர் வீசுகின்ற திவ்ய பிரதேசம்; செழுநீர்-செழுமை பொருந்

திய நீர்நிறைந்த குடந்தை; ஏர் ஆர்-அழகு நிறைந்த; நின்பால் அன்பாயே-சரீரம் கரைந்து அன்பாகவே நீர் வடிவம் ஆயிற்று)

''கோயில் பெருத்தது கும்பகோணம்'' என்பது பழமொழி எனினும் ஆழ்வார் மங்களாசாசனம் பெற்ற கோயில் இது ஒன்றே.

கும்பகோணம் நகரத்தில் தேவாரம் பெற்ற சிவன்கோயில்கள் மூன்று இருக்கின்றன.

திருமழிசையாழ்வார் திருநாட்டுக்கு எழுந்தருளியது இத்தலத்திலேயே.

பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையார், பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையார்; நம்மாழ்வார் ஆகிய எழுவரும் 51 பாசுரங்களால் சாரங்கராசனைப் போற்றியுள்ளனர்.

### 15. கண்டியூர்

அரண்சாபம் தீர்த்த பெருமாள், கமலவல்லி

கண்டியூர் அரங்கம் மெய்யம்
 கச்சி, பேர், மல்லை என்று
மண்டினார், உய்யல் அல்லால்
 மற்றையார்க்(கு) உய்யலாமோ''

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த திருக்குறுந்தாண்டகம்.

உருத்திரனுக்குக் கபால நிவர்த்தி செய்த ஊர்.

தஞ்சை-திருவையாறு நெடுஞ்சாலையில் திருவையாற்றுக்கு ஒரு கல் முன்னே இருக்கிறது. சாலையின் மீது மேல்புறத்தில் கோயில் இருக்கின்றது. எதிர்ப்புறத்தில் அட்ட வீரட்டங்களுள் ஒன்றாகிய தேவாரக் கோயில் இருக்கின்றது.

திருமங்கை யாழ்வார் இவ்வொரு பாசுரத்தாலே மங்களாசாசனம் செய்துள்ளார்.


### 16. திருவிண்ணகர் (ஒப்பிலியப்பன் கோயில்)

ஒப்பிலியப்பன், பூமி தேவி.

என்னப்பன், எனக்காய், இகுளாய், என்னைப்
 பெற்றவளாய்
பொன்னப்பன், மணியப்பன், முத்தப்பன் என்
 அப்பனுமாய்
மின்னப்பொன் மதிள்சூழ் திரு விண்ணகர்
 சேர்ந்தவப்பன்
தன்னொப்பார் இல்லப்பன், தந்தனன்,
 தனதாள் நிழலே.

—திருவாய் மொழி.

'இகுள்-இகுளை என்பதன் கடைக்குறை. தோழி என்று பொருள். செவிலித்தாய் என்று பொருள். செவிலித்தாய் என்று அருளிச் செய்வர். செவிலித்தாய்-தாய்க்குத் தோழி.




மிருகண்டு ரிஷியின் பத்தினி விருப்பப்படி உப்பில்லாத பிரசாதமே நிவேதனம்; ஒப்பலியப்பன் என்ற திருநாமமே-உப்பிலியப்பனாக மருவியுள்ளது.

திருவேங்கடமாகவே எண்ணிப் பிரார்த்தனை செலுத்துவோர் அதிகம். எனவே இவ்வூர் தென் திருப்பதி என்று வழங்கப்படுகிறது.

மூலவர்-திருவிண்ணகரப்பன்; உற்சவர்-பொன்னப்பன்; போகமூர்த்தி-முத்தப்பன்.

பூமிதேவிக்குத் தனிச் சந்நிதி இல்லை. பூமிதேவியும் மார்க்கண்டேயரும் இறைவன் சன்னிதியிலேயே இருக்கின்றனர்.

கும்பகோணத்துக்குக் கிழக்கே 4 கல் தொலைவில் இருக்கிறது.

இக்கோயிலுக்குப் பக்கத்தில் திருநாகேச்சுரம் என்ற பாடல் பெற்ற சிவன் கோயில் இருக்கின்றது.

திருமங்கையாழ்வார், பேயாழ்வார், நம்மாழ்வார் ஆகிய மூவரும் 47 பாசுரங்களால் பாடித் தொழுதுள்ளனர்.

### 17. திருக்கண்ணபுரம்

சௌரிராசன், கண்ணபுர நாயகி

மன்னுபுகழ்க் கௌசலைதன் மணிவயிறு
 வாய்த்தவனே
தென்னிலங்கைக் கோன்முடிகள் சிந்துவித்தாய்
 செம்பொன்சேர்
கன்னிநன்மா மதிள்புடைசூழ் கணபுரத்தென்
 கருமணியே
என்னுடைய இன்னமுதே இராகவனே
 தாலேலோ

—குலசேகரப் பெருமான் அருளிச் செய்த 'பெருமாள் திருமொழி (கன்னி-அழியாமை). பஞ்சகிருஷ்ண சேத்திரங்களுள் ஒன்று.

மயிலாடுதுறை-காரைக்குடி இருப்புப் பாதையிலுள்ள நன்னிலம் என்னும் இரயில் நிலையத்திலிருந்து கிழக்கே 5 கல்தொலைவு. நான்காவது கல்லில் திருப்புகலூர் சிவத்தலம் இருக்கிறது. அங்கே முடி கொண்டான்ஆற்றைப் பாலத்தின் மீது கடந்து தெற்கே செல்லுதல் வேண்டும்.

இத்தலத்திற்குத் திவ்விய பிரபந்தத்தில் பெரியாழ்வார், ஆண்டாள் - குலசேகரர், திருமங்கையார், நம்மாழ்வார் ஆகிய ஐவர் அருளிய 128 பாசுரங்கள் இருக்கின்றன. திருமங்கையாழ்வார் மட்டும் 104 பாடல்கள். இப்பதிக்குப் பாடியிருக்கின்றார். பெரும் பாலும்அகப்பொருள் சுவைவாய்ந்த பாடல்கள் மங்கை மன்னன் நூற்றுக்கு மேலே பாசுரம் பாடிய பதி இரண்டு, இன்னொன்று திரு நறையூர்.

திவ்விய பிரபந்தப் பாடல் பெருக்கத்தில் இப்பதி மூன்றாவதாக நிற்கின்றது. திருமாலி ருஞ் சோலையும் 128 பாசுரம் பெற்றிருக்கின் றது. முதலாவது திருவரங்கம். இரண்டாவது திருவேங்கடம்.

இத்தலத்தில் முனியதரன் (முனியோதரன்) பொங்கல் என அர்த்த சாமத்தில் ஓர் நைவேத் தியம் பெருமாளுக்குப் படைக்கிறார்கள். அரிசி, பாசிப்பருப்பு; நெய் மூன்றும் 5:3:2 என்ற விகிதத்தில் கலந்து செய்யப்படும் இப்பிரசாதம் மிகவும் சுவை வாய்ந்தது.

பூலோக வைகுந்தம் என்றும், அஷ்டாட்சர மகாமந்திரசித்தித் தலம் என்றும், கிருஷ்ணா ரண்ய சேத்திரம் என்றும் புகழ்வாய்ந்த தலம் இது. முத்தித் தலங்கள் எட்டு: திருவரங் கம், திருவேங்கடம், ஸ்ரீமுஷ்ணம், வானமா மலை, சாளக்கிராமம், புஷ்கரம், வதரி ஆசிர மம், நைமி சாரண்யம். ''ஓம் நமோ நாராய ணாய'' என்னும் திருவெட்டெழுத்தில் ஒவ் வோர் எழுத்து வடிவில் ஆண்டவன் இருந்து அருள் பாலிப்பதாகக் கூறுவர். இவ்வெட்டும் கூடி, கண்ணபுரம் அட்டாட்சரத் தலமாக இலங்குகிறதாம்.

முத்திற்கு வித்தான தலம் என்பதால் பிற கோயில் போல் இங்கு சொர்க்க வாசல் கூட கிடையாது. இங்கு தங்கிக் கண்வ மகரிஷிக்குப் பெருமாள் தரிசனம் தந்ததால், கண்வபுரம் என்பது கண்ணபுரம் என மாறியிருக்கிறது. கண்ணபிரான் தங்கியதால் கண்ணபுரம்என்றும் கொள்ளலாம்.

வலையர் குல மன்னனுக்குத் தன் திரு உருக்காட்டி ஆட்கொண்டு, அவன் மகளான பத்மினி தேவியையும், இங்கு மணந்துள்ளாராம் பெருமான். இந்த நாயகியை வலைய நாச்சியார் என்று வழங்குகின்றனர்.

பெருமானின் நடையழகைப் பட்டாச் சாரியாரின் கைகளில் இங்கு காட்டியருளினார் அரங்கநாதர். விபீஷணருக்குக் கைத்தல சேவை பிரதி அமாவாசையும்.

இங்கு நவக்கிரக சக்கரம் வெட்டப்பட்டு, பிரதிஷ்டை செய்து தினமும் பூசை நடை பெறுகிறது.

### 18. திருவாலி திருநகரி

வயலாலி மணவாளன், அமுதகடவல்லி

வந்துன தடியேன் மனம்புகுந்தாய்;
புகுந்ததற்பின் வணங்கும், என்
சிந்தனைக் கினியாய்! திருவே!
என்னாருயிரே,
அந்தளிர் அணியார் அசோகின் இளந்தளிர்கள்
கலந்து, அவையெங்கும்
செந்தழல் புரையும் திருவாலி யம்மானே!

—பெரிய திருமொழி.

திருமகள் எம்பெருமானை ஆலிங்கனம் செய்தமையால் ஆலி ஆயிற்று. திவ்விய தேசக் கணக்கில் ஒன்றாயினும் இது இரண்டு தனி ஊர்களாய் உள்ளது. திருவாலியில் நரசிம்மன் சந்நிதியும் அதற்கு இரண்டு கல் தொலை விலுள்ள திருநகரியில் வயலாலி மணவாளன், திருமங்கை யாழ்வார் சந்நிதிகளுமுள்ளன. திரு நகரிக்கு அரை கல் தொலைவில் வேதராச புரத்துக்கருகில் ஒரு மைதானத்தில் பங்குனி உத்திரத்தில் திருமங்கை யாழ்வார் திருமாலை வழிபறித்த வேடுபறி உற்சவம் நடக்கிறது.

ஆழ்வாருடைய திருவாராதனத் திரு மூர்த்திக்குச் 'சிந்தனைக் கினியான்' என்று பெயர். இத்திருநாமங் கொண்ட திவ்விய மங்கள விக்கிரகம் இன்றைக்கும் கலியன் சந்நிதி யில் சேவை சாதிப்பதுண்டு.

சீர்காழியிலிருந்து தென்கிழக்கே ஆறுகல் தொலைவு. திருமங்கையாழ்வார் பிறந்தருளிய குறையலூர் என்னும் தவம் இத்திருப்பதிக்கு அண்மையிலுள்ளது.

இங்குள்ள திருமங்கை யாழ்வார் தை அமாவாசை தோறும் எழுந்தருளி, குறைய லூர் சென்று, அதற்கு அணித்தேயுள்ள மங்கை மடத்தில் தங்கி, திருநாங்கூர் திருப்பதி12 இலும் கருட சேவை கண்டருளி, மீண்டும் திருநகரியை அடைகின்றார்.

குலசேகராழ்வாரின் ஒரு பாசுரமும், திரு மங்கையாரின் 41 பாசுரமுமாக, 42 பாசுரங் களைப் பெற்ற இனிய திருப்பதி.

சைவ ஒன்பதாம் திருமுறையில் ஏழாந் திருவிசைப்பா திருவாலி அமுதனார்இயற்றியது

—(தொடர்ந்து வரும்)



# விநாயகனே வெவ்வினையின் வேரறுக்க வல்லான்

செந்தமிழ்மணி
**கோ. சண்முகம், பி.காம்.,**

ஏனைய உண்மைப் பொருள்களை உணர்த்தும் குருமார்களைப் போல் ஞானத்தை உபதேசிக்கும் ஞான குருவாக ஏனையோர்கள் ஏன் அமைதல் கூடாது என்ற சிந்தனை சிலருக்குத் தோன்றும். அதற்கு உமாபதி சிவம் தமது திருவருட்பயனில்,

''அகத்துறுநோய்க்கு உள்ளினர் அன்றி
அதனைச்
சகத்தவரும் காண்பரோ தான்.''

என்று அழகாக விளக்கம் தந்துள்ளார். உடம்பிற்கு உள்ள நோய் அஞ்ஞானம் என்ற அகநோய். அந்நோயின் நிலையறிந்து உரிய நேரத்தில் ஞானமாகிய மருந்தைக் கொடுக்க வேண்டும். இத்தகைய ஞானத்தை அளிப்பதுஉயிரில் உயிராய் இரண்டறக் கலந்து நிற்கும் இறைவனுக்கன்றி வேறு எவர்க்கும் இயலாது. எனவே தான் ஞானத்தை அளிப்பவன் இறைவன் என்று திருவருட்பயன் உறுதியாக உணர்த்துகின்றது.

விநாயகப் பெருமானின்குருவடிவு திரு ஐந்தெழுத்தின் உட்பொருளை ஞானத்தை அளித்ததை ஔவைப் பிராட்டியார் (19-24) அடிகளில்) தெரிவிக்கின்றார்.

''உவட்டா உபதேசம் புகட்டிஎன் செவியில்
தெவிட்டாத ஞானத்தெளிவையும் காட்டி,
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக்கு அருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து''
(25—29)

(இனிய உபதேசத்தினை என் செவியில் உவட்டாமல் உபதேசித்து, தெவிட்டுதல் இன்றி பேரின்பத்திற்கு உரிய ஞானமாம் அருளறிவையும் காண்பித்து, ஐந்து புலன்களை அடக்குகின்ற வகையினையும், பேரின்பத்தை வளர்க்கின்ற தமது கருணையினால் இனிதாக எனக்கு அறிவித்து, தத்துவங்கள் ஒன்றன் பின் ஒன்றாக ஒடுங்கும் நுண்பொருட் கருத்துக்களை உணரும்படி செய்து)

மெய்ப் பொருளைக் காண்பதற்கும்இறைவனுடைய திருவடியை அடைவதற்கும் ஞானம் வேண்டும்.

''ஈனமில்லா மெய்பொருளை இம்மையிலே காண வெளி ஞானமெனும் அஞ்சனத்தை நான் பெறுவதெந்நாளோ?' என்கிறார் தாயுமானவர்.

''ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டலில்லை;
ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று
ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்காவா
ஞானத்தின் மிக்கார் நரரின் மிக்காரே''

என்று திருமூலரும் ஞானத்தின் உயர்வினையும் பெருமையினையும் விளக்கமாக உணர்த்துகின்றார்.

மனிதன் இறைவனை நெருங்கத் தடையாயிருப்பது ஐம்புலன்கள். பல ஞானிகள் இது குறித்துக் குறிப்பிடுகின்றார்கள். சிவஞான போதத்தினை இயற்றிய மெய்கண்டார் கொடும் தீங்குகளைப் புரிந்துவரும் வேடர் போல் ஐம்புலன்களும் இறைவனுடைய திருவடியை அடைய முடியாமல், பலவழிகளில் அல்லற்படுத்துகின்றன என்றார்.

''ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினி
லுணர்த்தவிட்டு
அன்னிய மின்மையின் அரன்கழல் செலுமே''

—சிவஞான போதம்—சூத்திரம் 8

''அழிவுடைத் தாயவாழ்க்கை ஐவரால்அலைக்
கப்பட்டுக்
கழியிடைத் தோணிபோன்றேன் கடவூர்
வீரட்டனாரே''

—அப்பர் அடிகள்

திருமூலர் பொறி புலன்களை ஒடுக்கி அனுபவத்தில் திளைக்கும் நிலையினைக் கீழ்வருமாறு கூறுகிறார்.

''ஐந்தில் ஒடுங்கில் அகலிட மாவது
ஐந்தில் ஒடுங்கில் அருந்தவ மாவது
ஐந்தில் ஒடுங்கில் அரன்பத மாவது
ஐந்தில் ஒடுங்கில் அருளுடை யாரே''

—திருமந்திரம்.

மனிதன் பரம்பொருளை அடையத் தடையாக இருப்பது ஐம்புலன்கள். ஐம்புலன்களுக்கு அடிப்படையாக இருப்பது ஆசை. சிலரை விரும்புவதற்கும் சிலரை வெறுப்பதற்கும் சிலரை கெடுப்பதற்கும் சில உயிர்களுக்குத் துன்பம் செய்வதற்கும் அடிப்படையே உள்ளத்தில் எழுகின்ற ஆசைதான்.

''ஆசைக்கோர் அளவில்லை'' என்றார் துறவு நெறிக்குப் பெருமை சேர்த்த தாயுமானவர். இந்த ஆசைகள் உண்டாவதற்குக் காரணம் மனிதனை மயக்கிக் கொண்டிருக்கும் ஆணவம்.

இந்த ஆணவம் ஒரு உயிரில் இருக்கும் வரை ஐம்புலன்களை அடக்குதல் முடியாத ஒன்று. பல நூல்களைப் படித்து, அழியாத பல நூல்களை உலகத்திற்கு அளித்தவர் பெர்னாட்ஷா. ஒருமுறை வயல்பகுதியில் ஒரு வரப்பின்மேல் நடந்து கொண்டிருந்தார். எதிரே அவர் வெறுக்கின்ற ஒரு மனிதர் வந்தார். முதலில் யார் வழிவிடுவது என்ற பிரச்சனை. ஷா ஆணவத்தோடு ''நான் முட்டாள்களுக்கு வழிவிடுவதில்லை'' என்று கூற அதற்கு எதிரே வந்த மனிதர் கூறினார். ''நான் அப்படி கிடையாது-முட்டாள்களைக் கண்டால் வழிவிடுவேன்'' எனக் கூறி வழிவிட்டாராம். இதை ஷாவே பிறகு குறிப்பிட்டு உலகத்தில் உள்ள பலமக்கள் என்னை அறிஞர் என்று மதிக்கின்றார்கள். அந்த ஆணவத்தில் மூழ்கிய நான் ஒருசாதாரண மனிதனிடம் முட்டாளாகி விட்டேன்; எனது ஆணவ உணர்ச்சியை அடக்கிய அந்த மனிதரை வணங்குகிறேன் என்று எழுதுகிறார்.

ஆசையை அடக்குவதற்கு மனப்பயிற்சி மிகமிகத் தேவை. சத்தியம், நேர்மை, மன அடக்கம், மன உறுதி; மனத் திருப்தி இவற்றை கடைப்பிடித்தால் ஐம்புலன்களின் வழியே மனிதன் செல்லாமல் இருப்பான்.

நாம் எதை அதிகமாக சிந்திக்கிறோமோ அதனிடத்தில் நமக்கு உறுதியாகப் பற்று உண்டாகிறது. போதை தரும் கள்ளை நினைக்கிறவனுக்கு கள்ளுண்ணல் என்பது பைத்தியமாகவே போய்விடுகிறது. அறிவை அதிகமாக நேசிக்கிறவனுக்கு கல்வியின்றி வேறு எங்கும் அவன் மனம் செல்லாது. இசையையே சிந்திப்பவன் இசைமயமாகிவிடுகிறான். இறைவனிடத்தில் சிந்தனையை செலுத்துபவன் இறைவனின் அருள் மயமாகிறான். 'நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சேகுறி'' என்றார் அப்பர் அடிகள்.



## இறைவன் கொற்றாளாக வந்தது ஏன்?

**சமுதாயத் திருத்தொண்டுகளைச் செய்வதில் எல்லோரும் ஈடுபட வேண்டுமென்ற படிப்பினையைக் காட்டுவதற்காகவே இறைவனே கொற்றாளாக வந்தனன்.**

**—தவத்திரு குன்றக்குடி அடிகளார்**

ஆகவே இறை வழிபாட்டில் பலமும் உறுதியும் அவசியம். அந்த உறுதியான உள்ளம் அமைந்துவிட்டால் யாவும் அடங்கிவிடும். தன்னலம் கருதாத குணங்களைக்கொண்டவனிடம் தேவர்களும் அஞ்சுகின்றனர். ''தூய்மையான குணங்களின் பலம் அசுரமானது'' என்று சுவாமி விவேகானந்தர் அறிவுறுத்துகின்றார். கடவுள் வழிபாடுதான் மனிதன் ஒழுக்கத்தை சீர்திருத்தக் கூடிய ஒன்று. ''ஒரு மனிதனிடம் தீய ஆசைகளோ தீய எண்ணங்களோ தோன்றுகிறபோது இறைசிந்தனை செய்தால் தீய சிந்தனைகளை அழித்து மேலும் தோன்றாமல் இருக்கச் செய்யும். அதுவே மனிதனின் மனத்தை தூய்மைப்படுத்தி இறைவன் இருக்கும் புனிதமான இடமாக மாற்றும். இதை

''தேடித் தேடொணாத் தேவனை
தேடிக் கண்டு கொண்டேன்'' [யென்னுள்ளே

என்னும் அப்பர் அடிகளின் அருள்வாக்கினால் உணரலாம்.

ஒரு மனிதனுடைய பெயரைக் கெடுப்பதற்கு முக்கியமானவைகளில் முதல் மூன்று காமம், வெகுளி, மயக்கம்.

''காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன
நாமம் கெடக் கெடும் நோய்.''

என்றார் வள்ளுவனார். இந்த நோய் உள்ளவரை மனிதனால் இறைவனை அடைய முடியாது. இவைகளை அடக்குவதற்கு தூய சிந்தனையும் உறுதியான இறை வழிபாட்டு உள்ளமும், யாருக்கும் தீங்கு செய்ய நினைக்காத உள்ளமும், தனக்குத் தீமை செய்தவர்களுக்கும் நன்மையே செய்யக் கூடிய உயர்ந்த எண்ணமும், எல்லா உயிர்களையும் தம்முயிர் போல் எண்ணி அன்பு காட்டும் பண்பும் தேவை. இவைகளை ஒரு மனிதன் அடைந்து விட்டான் என்றால் அவனே ஐம்புலன்களும் அடக்கியவனாவான்.

(தொடரும்)





# பக்தி இலக்கியம்

பேராசிரியர் **மது. ச. விமலானந்தம்**

'ஆங்கிலம், வாணிகத்தின் மொழி என்றும் இலத்தீன் சட்டத்தின் மொழி என்றும், கிரேக்கம் இசையின்மொழி என்றும்; ஜெர்மன் தத்துவத்தின் மொழி என்றும், பிரெஞ்சு தூதின் மொழி என்றும், இத்தாலியம் காதலின் மொழி என்றும் கூறுவது ஒருபுடை ஒக்குமெனின், தமிழ், பக்தியின் மொழி எனக் கூறுவது இனிது பொருந்தும். பக்தியில் திளைக்கும் செய்யுட்கள் தமிழில் அரும்பி மலர்ந்தது போல, வேறு எம்மொழியிலும் மலர்ந்தில. 'அளவிலும் சுவையிலும் தமிழிலுள்ள திருப்பாடல்களினைப் போல, பிற இலக்கியங்களில் இல்லை' என அறுதியிட்டு உறுதி கூறுகிறார் பன்மொழி அறிஞர் இலக்கிய தூதுவர் மறைத்திரு தனிநாயக அடிகளார். இதனால் பக்தியின் மொழி தமிழ் எனத் தெளியலாம்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்கம் மருவிய காலத்திலேயே பக்தி இலக்கிய மரபு கால் கொண்டு விட்டது. இதன் முன்னோடிகளாக திருஞானசம்பந்தர்,. திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும், திருமூலர் காரைக்காலம்மையாரும் திகழ்ந்தவர். பல்லவர் காலத்தில் பக்தி இலக்கிய மரபு வளர்ந்து சிறந்தது.

சங்கம் மருவிய காலத்தில் தமிழ்நாட்டில் களப்பிரர் ஆட்சி ஏற்பட்டது. புறச்சமயக்களப்பிரர் பழைய சமயங்களான சைவ வைணவ சமயங்களுக்கு ஆதரவு அளிக்காமையினால் பௌத்த சமண செல்வாக்கே மிகுந்தது. இவற்றை எதிர்த்து மேலோங்க வைணவமும் சைவமும் முனைந்தன. இதுவே பக்தி இயக்கம்; இதன் தளபதி திராவிட சிசு ஞானசம்பந்தர். இதற்கு ஏற்ற அரசியல் சூழலும் அரும்பிற்று. தெற்கே பாண்டியர் களப்பிரரை வென்று வாகை சூடினர்; வடக்கே பல்லவர்கள் களப்பிரரைப் புறங்கண்டு நல்லாட்சி அமைத்தனர். மகேந்திரவர்ம பல்லவனும் நின்றசீர் நெடுமாறனும் சமணம் விடுத்துச் சைவம் சார்ந்தனர். சமயக் குரவர்களும் ஆழ்வார்களும் தலங்கள்தோறும் சென்று பாடிப்பாடி பக்தி இயக்கத்தை மக்கள் இயக்கமாக்கினர். இவர்களால் 'பாடல் பெற்ற தலங்கள்' 'மங்களா சாசனம் செய்யப்பெற்றவை' எனக் கோயில்கள் பெருமை பெற்றன.

பக்தி இயக்கம் எனும் சமய இலக்கிய இயக்கத்தால் சைவம் வைணவம் இரு வாய்க்கால்களாக ஓடி வளம்பரப்பின. பக்தி இலக்கியம் எனும் காசின் இரு பக்கங்களாக அமைவன சைவமும் வைணமும்; வேறு வகையில் விளம்பின், பக்தி இலக்கியப் பேராற்றின் இரு கரைகள் இவை எனலாம்.

ஆழ்வார், நாயன்மார்களின் திருப்பதிகங்கள், திவ்விய பிரபந்தம் திருமுறைகள் என்ற இருபெரும் தலைப்பில் திகழ்கின்றன. இவை இரண்டுமே பக்தி இலக்கியம் என்றேத்தப் பெறுவன.

பக்தி இலக்கியம், மக்களைப் பாடாது, இறைவனை இறையனுபவத்தைப் பாடுவது; நாயன்மார்கள், சிவபரத்துவத்தை நவின்றனர்; ஆழ்வார்கள் திருமாலின் பரத்துவத்தைப் பாடினர்.

சைவமும் வைணவமும் இருவேறு சமயமாயினும், கடவுளின் கல்யாண குணங்களைக் கூறுவகையிலும், வழிபாட்டு முறையிலும் ஒன்றாகவே இருப்பதனை நன்றாகவே உணரலாம். தமிழரின் இருகண்கள் சைவமும் வைணமும்; கண்கள் இரண்டாயினும் பார்வை ஒன்று தானே. அம்முறையில் இரண்டும் பக்தி இலக்கியங்களாகப் பிறங்குகின்றன. கருவாலும் உருவாலும் இயைந்தே செல்கின்றன.

பக்தி இலக்கியப் பெற்றி: 1. தமிழ் இலக்கிய வளர்ச்சி வரலாற்றில் ஒரு பெரும் திருப்பத்தினை ஏற்படுத்தியது. 2. பௌத்த சமண வலையினின்றும் மக்களை விடுவித்து காத்தது. 3. வெறும் தனிச் செய்யுட்களாகவே விளங்கிய சங்கச் செய்யுட்கள், பண்ணார்ந்த பனுவல்களாகவும், கற்பனை நயம், கவிச்சுவைமிக்கக் காவியங்களாகவும் வளர உதவிற்று. 4. சங்க காலத்தில் இலக்கியம், பொதுவாக அகமும் புறமுமாக, சிறப்பாகக் காதல் வீரமுமாக விளங்கியது; சங்கம் மருவிய காலத்தில் அறநெறி இலக்கியங்கள் அரும்பின. இந்த இரண்டின் சீர்மையும் கொண்டது பக்தி இலக்கியம். சங்கக் காதல் பக்தி இலக்கியத்தில் நாயகன் நாயகி பாவமாகப் பெருகிற்று; காதலுக்குத்

துணை நிற்கும் வீரம் இங்கு வேகமாக வடி வெடித்துள்ளது; பக்திப் பாவனையின் ஊடே நீதிகள் தத்துவ முத்துக்களாக முறுவலிக்கின் றன. 5. மங்கி மறையும் நிலையிலிருந்த தமிழிசை துளிர்த்துத் தழைத்தது பக்தி இலக் கியத்தால்தான். 6. மண்ணக மாந்தரைப் பாடு வது விடுத்து விண்ணகத் தேவரை இறைவனை பாடும் புதுமரபினைத் தோற்றுவித்தது. 7. கோயில்களை மையமாகக் கொண்டே பக்திப் பனுவல்கள் சுழன்றதால் கோயில்களின் அருமை பெருமை பெருகிற்று. ஆலயங்கள் சிறப்புற்றன வைணவத் திருப்பதிகள் 108, பாடல் பெற்ற சைவத்திருக்கோயில்கள் 275. 8. பக்தி இலக் கியங்கள் பொருளற்ற வறுமையினும் அருளற்ற வறுமையே மிகக் கொடியது என்ற உணர் வினை உண்டாக்கியது. 9 மெய்யுணர்வின் மேலீட்டால் விளைந்த ஞானப்பாக்கள்-ஞான விளக்கு பக்தி இலக்கியம் எனலாம். பக்தி இலக் கியம் ஞானத் தமிழ் பிலிற்றும் பான்மையது. 10. புதிய பல சிற்றிலக்கிய வடிவங்களையும் பக்தி இலக்கியம் தந்துளது. ஆசிரிய விருத் தம், வெண்பா,பதிகம், பத்து, எட்டு, எழுபது சதகம், திருமொழி, திருவாய்மொழி,திருமந்தி ரம், திருப்பல்லாண்டு, திருப்பள்ளியெழுச்சி, பாவை, திருவம்மானை, திருப்பொற்சுண்ணம், தெள்ளேணம், பொன்னூசல் என 39 சிற்றிலக் கிய வடிவங்களை விதைத்துப் பிற்காலச் சிற் றிலக்கிய வகைக்கு வழிகோலியுளது. 11,. திரு வெழுகூற்றிருக்கை, ஏகபாதம்,யமகம் போன்ற சித்திரகவிகளும் அறிமுகமாயின. 12. தோத் திர தெய்விகத் திருப்பாக்கள் தெய்வீக இலக் கியம் (Dəvotional Literature), என்ற அருமை யது; இதன் பெருமை உணர்ந்து உணர்ந்து, நினைந்து, நினைந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து பாடிப்பாடிப் யுருகிப் புளகிப்பதற்குரிய பெற்றி யது.

பக்தி இலக்கியம் படைத்தவர்கள்; நாலா யிரம் நல்கிய ஆழ்வார் பன்னிருவரும், பன்னிரு திருமுறை தந்த இருபத்தேழு தெய்வமாக் கவிஞர்களுமாக மொத்தம் முப்பத்து ஒன்ப தின்மர் ஆவர்.

இப்படிச் சைவத்தில் பன்னிரு திருமுறை; வைணவத்தில் பன்னிரு ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் இணைந்ததே பக்தி இலக்கியம். தமிழ்மொழியில் உயிரெழுத்துக்கள் பன்னி ரண்டு. அதைப்போலவே சைவ வைணவத்தி லும் பன்னிரு. திருமுறைகள், பன்னிரு ஆழ் வார்களின் பாசுரங்கள் அமைந்து விளங்கக் காணலாம்.

தேங்காய் ஒன்று; அதன் மூடிகள் இரண்டு. பக்தி இலக்கியம் தேங்காய் என்றால், சைவ வைணவப் பனுவல்களே அத்தேங்காயின் இரு மூடிகள். இருமூடிகள் இணைந்ததே தேங்காய்! அப்படியே பக்தி இலக்கியம்.

இவற்றைத் தேடித் தொகுத்தளித்த சான்றோர் நம்பியாண்டார் நம்பிகளும் நாத முனிகளும் ஆவர். இருகண்களனைய இவ்விரு

## இறைவன் இருக்குமிடம்



**எல்லா உயிர்களையும் தம்முயிரேபோல்**
**போற்றி, யார் உவப்புடன் அவ்வுயிர்களின்**
**மேன்மைக்காக உழைக்கிறார்களோ**
**அவர்களின் திருவுளத்தில் இறைவன்**
**கோயில் கொண்டு விளங்குகின்றான்.**

—இராமலிங்க சுவாமிகள்

பெருமக்கட்கும் தலை தாழ்த்தி தமிழ் வணக் கம் செய்வோம். இன்று திருமுறைகளும் திவ்வியப் பிரபந்தமும் போதிய அளவு மாண வர்களால் விரும்பி பயிலப் பெறவில்லை. போற்றத் தக்க வகையில் அவை பரவவில்லை. எனவே இனியாகிலும் பக்தி இலக்கியத்தை ஏற்றுப் போற்றி இன்புறுவோமாக. பழுத்த முதியோரே பக்தி இலக்கியம் பக்கம் போகின்ற னர்; இளைஞர் இப்பக்கம் தலைவைத்துப் படுப்பதே இல்லை என்ற குறையகலவேண்டும்.

பிற மதத்தினரைப் போலே நமக்குரிய பக்திப் பேரிலக்கியத்தில் நாம் பற்றுமிகக் கொண்டு,போற்றுதல் புரிந்து பக்தி இலக்கியப் பெருஞ் சொத்தினை இளைய தலைமுறை யெல்லாம் போற்றிக் கற்றிடச் செய்வோம். மக்கள் இலக்கியமாக மிளிர, ஒளிர பக்தி இயக்கத்தைப் புதுக்கிப் புத்தொளி பரப்பு வோமாக!

# காதலாகி ஓதுவீர்!

— சுதர்சனம் —

நாம் எப்பொழுதும் இறைவனின் நாமத்தை மனதில் கூறிய வண்ணம் இருக்க வேண்டும். இறைவனின் நாமத்தை நினைப்பதால் நமக்கு என்ன நன்மை என்று கேட்கலாம். இதற்கு உதாரணம் சக்குபாய், துக்காராம், ராம்தாஸ் சூர்தாஸ், ஆஞ்சநேயர் போன்ற பக்தர்களே! இவர்களுடையவாழ்க்கையேநமக்குபடிப்பினை. இராமாயணத்தில் இராமரின் திருப்பெயரை கூறிக் கொண்டே வானரங்கள் சமுத்திரத்தில் பாலம் கட்டினர். கடவுளின் நாமத்தை மனதில் உருவிட்டுக் கொண்டே இருந்தால் நம் வாழ்விலும் என்ன துன்பம் வந்தாலும் அதை தாங்கும் மனப்பக்குவம் இருக்கும். வாழ்க்கை கசந்து போகாது. இறைவனின் பக்தர்களாக திரேதா யுகத்திலும், துவாபர யுகத்திலும், இருந்தவர்களின் பெயர்களை நாம் இந்த கலி யுகத்தில் இன்றும் நினைவு கூறுகிறோம். மார்க்கண்டேயன் கடவுளின் பெயரை கூறிக் கொண்டே இருந்ததால் இறப்பினையே தவிர்த்தான். பிரகலாதன் கடவுளின் பெயரை ஜபித்ததால் கடவுளையே ஒரு அவதாரம் எடுக்குமாறு செய்தான். இப்படி புராண இதிகாசங்களில் பல பெரும் பக்தர்கள் கடவுள் திரு நாமத்தை உச்சரித்து இறைவனையே அடைந்துள்ளார்கள். அவர்களின் வாழ்வே நமக்கு ஒரு படிப்பினையாகவும் நமது சந்தேகங்களுக்கு விளக்கங்களாகவும் அமைந்துள்ளன.

கடவுளரின் திருப்பெயரை உச்சரிப்பது எப்படி என்பதைப் பற்றிச் சிறிதுசிந்திப்போம். கடவுள் பெயரை உருவிடுவதே நாம ஜெபம். எப்பொழுதும் நமது நாக்கு கடவுளின் பெயரைச் சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும். நமது மனம் கடவுளையே நினைத்து இருக்க வேண்டும். அவன் தன் திருப்பெயரை தொடர்ந்து ஓதிக் கொண்டே இருக்க வேண்டும். தைல தாரை போன்று அதாவது தைலத்தை (எண்ணெய்) ஊற்றினால் எப்படி அது இடைவெளி இல்லாமல் விழுகிறதோ அதே போன்று இடைவெளி இல்லாமல் சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும். கடவுளின் பெயரை சொல்லச் சொல்ல அவருடைய சகல குணங்களும், நன்மைகளும் நமக்கு வந்து சேரும். நமது மனத்தில் உள்ள காமம், குரோதம் லோபம், மோகம், மதம், மாச்சர்யம் எல்லாம் விலகி தீங்கு நினையாமை, சத்யம், தர்மம், அமைதி, அன்பு. சகிப்புத் தன்மை போன்ற நற்குணங்கள் வந்து சேரும். நாம் செய்யும் நல்ல காரியங்களுக்கு நமக்கு பலன் உண்டு. நல்ல காரியங்களை செய்தால் நல்ல பலன் கிட்டும். தீய காரியங்கள் செய்தால் கெடுதல் தான் விளையும். நல்ல காரியம் தீய காரியம் செய்வது நம் மனதைப் பொருத்து உள்ளது. எனவே மனம் தூயதாக இருக்க வேண்டும். அதற்குத் தான் இறைவன் நாமத்தைஓதுவதுநமக்கென்று ஒரு கடவுளின் பெயரை நமக்கு பிடித்த பெயரை தேர்ந்தெடுத்து அந்த பெயரை எப்பொழுதும் கூறிக் கொண்டே இருக்க வேண்டும். இராமர், கிருட்டிணர், முருகன், சிவன், விநாயகர், கோவிந்தன், பராசக்தி, துர்க்கைஎன நமது இந்துமதத்தில் லட்சக்கணக்கான பெயர்கள் இருக்கின்றன. அவற்றில் நமக்குப் பிடித்தமான, தெய்வத்தின் பெயரை தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். அந்த பெயரை நாம் விழித்தது முதல் இரவு தூங்கும் வரை, நடக்கும்போதும், குளிக்கும்போதும், உணவு உட்கொள்ளும் போதும், துணி துவைக்கும் போதும் ஏன் நாம் இயற்கை, செயற்கை காரியங்களை செய்யும்போது கூட ஓதிக் கொண்டே இருக்க வேண்டும். குளிக்கும் பொழுது அந்த நாமத்தை கூறிக்கொண்டே குளித்தால் கங்கையில் குளித்த புண்ணியம் கிட்டும். உணவு உட்கொள்ளும்போது உரு விட்டால் அந்த உணவினால் எந்தக் கெடுதியும் வராமல், அந்த உணவு நம் உடலையும் மனதையும் தூய்மையாக்கும். இப்படி நாம் செய்யும் ஒவ்வொரு செயலின் போதும் உச்சரிக்கும் இறைவனின் பெயரானது அச்செயலை புனிதமாக்குகிறது. இது நாளடைவில் நம்மை நாம் உச்சரிக்கும் கடவுளரின் குணத்தை அடையச் செய்கிறது. இதை நாம் நிச்சயமாக உணருவோம். ஒரு சின்ன உதாரணத்தால் கடவுளின் பெயரை உருவிடுவதன் முக்கியத்தை நாம் அறிவோம். ஒரு சமயம் பரமசிவமும், பார்வதியும் கைலாயத்தில் இருக்கும்போது திடீரென பார்வதிதேவி, சிவனிடம் பூவுலகில் நடந்து கொண்டிருந்த ஒரு நிகழ்ச்சியை பற்றிக் கூறினார். அதாவது ஒருவன் மரத்தின் கிளையில் உட்கார்ந்து கொண்டிருக்கும்போது உறங்கிவிடுகிறான். அவன் உறக்கத்தில் எந்நேரமும் மரக்கிளையிலிருந்து விழுந்து விடக் கூடிய நிலையில் இருந்தான். அதைப் பார்வதி பரமசிவனிடம் கூறினாள். அந்த மனிதனை எப்படியாவது காப்பாற்றுமாறு சிவனிடம் வேண்டினாள். அதற்கு சிவபெருமான் பின் வருமாறு கூறினார். "அந்த மனிதன் தூக்கத்தில் மரத்தினின்று கீழே விழும்போது 'அம்மா' என்று கூறிக்கொண்டு விழுந்தால் உலகத்தின் தாய் பார்வதி தேவி நீ அவனை கீழே விழாமல் தாங்கிக் கொள்ள வேண்டும். அப்படி இல்லாமல் அப்பா என்று சொல்லிக் கொண்டு விழுந்தால் உலகத்திற்கு தந்தையான நான் அவனை தாங்க வேண்டும் என்று சொன்னார். ஆனால் பரிதாபம்! அந்த மனிதன் தூக்கத்தில் கீழே விழும்போது 'ஐயோ' என்று கூறிக் கொண்டே விழுந்தான். உடனே எமன் அவனை தூக்கிச் சென்று விட்டான். ஐயோ என்பது எமனைக் குறிக்கும். இதுதான் இன்றைய உலகில் மனிதரின் நிலை.



# கம்பரின் இராமாவதாரம்



டாக்டர் த. அமிர்தலிங்கம்

[26]

கைகேயியைத் தன் தாய் எனக் குகனிடம் அறிமுகப்படுத்திக் கொள்ளவும் இயலாமல் மயங்குகிறான் பரதன். ''இராமரைப் பிரிந்த சோகத்தில் எல்லோரும் உயிர் ஒடுங்கியிருக்க, இவள் ஒருத்திதானே வாட்டமில்லா முகத்தோடு இப்பொழுதும் இருக்கிறாள். எல்லோருடைய துன்பத்திற்கு மூலகாரணமும், என்னை வையம் பலவும் கூறிப் பழிதூற்றவும் காரணமான இப்பாவிதான் தன் பாழ்வயிற்றில் என்னை நெடுங்காலம் சுமந்திருந்தாள். இவளை இன்னுமா யார் என நீ உணர்ந்து கொள்ளவில்லை? இவளே எனைப் பெற்றவளான கைகேயி.'' என்று வேதனை மிக கைகேயியை இன்னாள் என்று குகனுக்கு எடுத்துக்கூறுகிறான் பரதன்.

''படரெல்லாம் படைத்தாளைப் பழிவளர்க்கும்
செவிலியைத் தன் பாழ்த்த பாவிக்
குடரிலே நெடுங்காலம் கிடந்தேற்கு
உயிர்ப்பாரம் குறைந்து தேய
உடரெலாம் உயிரில்லா வெனத்தோன்றும்
உலகத்தே ஒருத்தி அன்றோ
இடரிலா முகத்தாளை அறிந்திலையோ
இந்நின்றாள் எனையீன்றாள்''.

பண்பில் இராமரை ஒப்பவனாக - இராமருக்கும் பலபடி மேலாக, உயர்ந்து நிற்கும் பரதனை ஈன்றவள் என்பதால், இரக்கம் அற்றவளான அக்கைகேயியையும் தாய் எனமகிழ்ந்து தன்னிரு கரங்களையும் குவித்து குகன் வணங்குகின்றான். இதேநேரம் ஓடமும் கங்கையின் தென்கரைக்குப் பாதுகாப்பாக வந்து சேர்ந்துவிடுகிறது. ஓடத்தை விட்டு இறங்கி தாயர் மூவரும் சிவிகையில் ஏறி முன் செல்ல பரதசத்ருக்கனர்களும் குகனும் பல காத தூரம் கால்நடையாகவே நடந்து சென்று பரத்துவாச முனிவருடைய ஆசிரமத்தைச் சென்று சேர்கிறார்கள். முனிவர்கள் புடைசூழ வந்து பரதனை எதிர்கொள்கிறார் பரத்துவாசமுனிவர். பரத்துவாசரின் திருவடிகளில் விழுந்து பரதன் வணங்க அவனை ஆசிகூறி வாழ்த்தும் பரத்துவாசர் ''தாய் உனக்கு அளித்த அரசை மகுடம் தரித்து ஆளாமல், மரவுரி தரித்து ஏன் கானகம் வந்தாய்?'' என்று வினவவும் செய்கிறார் முனிவர்.

பரத்துவாசரின் அவ்வினா குணமென்னும் குன்றேறி நிற்கும் பரதனையும்சினம் கொள்ளச் செய்கிறது. ''நியாய அநியாயங்கள் அறிந்திருக்கும் தாங்களுமா எனை அரசாளக் கூறுவது?'' என்று பரத்துவாசரிடம் தம் சினத்தை வெளிப்படுத்தும் பரதன் ''இராமருக்குரிய அரசை நான் ஆளமாட்டேன். இராமரே ஆள்வார். அரசாள இராமர் மறுத்தால் அவருடனே இருந்து நானும் வனவாசம் புரிவேன். இதுவே என் முடிவு'' என்று பரதன் கூற, அவன் தூய சொற்களைக் கேட்டுப் பரத்துவாசரும் முனிவர்களும் தத்தம் மேனியிலும், மனத்திலும் குளிர்ச்சியான சந்தனத்தைக் கொண்டு பூசியது போன்று மிகுந்த மகிழ்ச்சியடைகிறார்கள். அகமகிழ்வோடு பரதனைத் தம் ஆசிரமத்திற்கு அழைத்துச் செல்லும் பரத்துவாசர் ''அனைவருக்கும் நான் இப்போது அறுசுவை விருந்தளிக்கப் போகிறேன்'' என்று கூறுகிறார். பற்றுக்கள் யாவும் விட்ட அப்புண்ணிய தவச்செல்வர் வேள்வித் தீயினை மூட்டி, வேள்வி ஓம்பி, வானகத் தேவர்களை வையத்திற்கு வரவழைக்கிறார்.

தேவதச்சரான விசுவகர்மா அழகிய மாடமாளிகைகளை அவ்வாரண்யத்தில் நொடியில் அமைக்கிறார். யமன், குபேரன், வருணன், இந்திரன், சந்திரன் முதலான தேவர்கள் அறுசுவை உணவுப்பொருட்களையும், அவற்றை அனைவருக்கும் பரிமாறுவதற்கு அரம்பையர்களையும் வரவழைக்கின்றனர். அத்தேவ மாதர்கள் பரதசத்ருக்கனர்களுடன் வந்திருக்கும் ஆடவர்கள் அனைவருடைய மேனியிலும் வாசனைப் பொடியை நன்கு தேய்த்துப் பூசுகின்றனர்.; ஆகாய கங்கையை வரவழைத்து அதில் அவர்களை நீராட்டுவித்து, பூப்போன்ற மெல்லிய





பட்டாடையும், பொன்னாபரணங்களையும் அணியத் தருகின்றனர். தேவாமிர்தம் போன்ற உணவினையும் அனைவருக்கும் ஊட்டி அம்ச தூளிகா மஞ்சத்திலும் அவர்களைப் படுக்க வைத்து தேவகானம் இசைக்கிறார்கள்.

ஆடவரை உபசரித்ததைப் போலவே மக ளிரையும் அவர்கள், தோழிகள் - சேடியரைப் போல பரிவுடன் உபசரிக்கிறார்கள். பரதனின் படையிலுள்ள யானைகளுக்கும் தேன்கலந்த உணவையும், செந்நெல் பயிர்த்தழைகளையும் உண்ணக்கொடுத்து அவைகளை இளைப்பாற்று கின்றனர்; அவ்வாறே மரகதரத்தினத்தின் இள வொளிபோல் பசுமை பெற்றுத்திகழும் புற்க ளைக்கொண்டு குதிரைக் கூட்டங்களை உண் பிக்கின்றனர். இவ்வாறு பரத்துவாசர் உருவாக் கிய சொர்க்கபோகத்தை அயோத்திமக்களுடன் மாக்களும் நுகர்ந்து மகிழ்ந்திட, பரதசத்ருக்கன ரும் குகனும் அவற்றை மறுத்து காயும் கிழங்கு களும் மாத்திரம் அருந்தி மண்தரையில் படுத் துப் பொழுதினைக் கழிக்கிறார்கள்.

''இன்னர் இன்னணம் யாவரும் இந்திரன்
துன்னு போகங்கள் துய்த்தனர் தோன்றல்தான்
அன்ன காயும் கிழங்குமுண்டு அப்பகல்
பொன்னின மேனி பொடியுறப் போக்கினான்''

என்று சுவர்க்கபோகத்தை மறுத்த பரதனின் பக்தி உள்ளத்தை நமக்குக் காட்டுகிறார் கவிச் சக்கரவர்த்தி கம்பர்.

மறுநாள் காலை ஆதவன் தோன்றும் போது பரத்துவாசரின் ஆற்றலால் முன்னிரவு உண்டான சொர்க்கமெல்லாம் கனவுபோல மறைந்துபோய்விடுகிறது. அப்போக நீக்கம் குறித்து வருந்திடாத அயோத்திமக்களும் இரா மரைத் தரிசிக்கும் ஆவலோடு மீளவும் தம் பயணத்தைத் தொடர்கிறார்கள். இராமலக்கு வனரும், சீதையும் முன்பு கடந்துசென்றதான கொடியதொரு பாலைவனம் இப்பொழுது இவர்கள் வழியிலும் குறுக்கிடுகிறது. சீதை, வெம்மை தாங்கிடமாட்டாள் என்பதால் முன்பு பாலை தானே சோலையாக மாறி விந்தை புரிந்தது. இப்போதும் முன்பு போலவே பாலை சோலையாக மாறி விந்தை புரிகிறது எனக் கூறும் கவிச்சக்கரவர்த்தி கம்பர் அதற்கான காரணத்தை நயம்பட வர்ணிக்கிறார். அளவி லாத சேனைகள் நடத்தலால் எழும் புழுதி சூரி யனை மறைப்பதாலும், யானைகள் மிகுதியாக மதநீரைப் பொழிந்து தரைச்சூட்டினைத் தணிப்பதாலும், சிற்றரசர்களின் வெண்கொற் றக் குடைகள் பந்தலிட்டதைப்போல விளங்கு வதாலும் பாலை சோலையாய் மாறுகிறது என்று கூறும் கவிச்சக்கரவர்த்தி கம்பர் ''தாய் 'பிடி' என்று கொடுத்த அரசைப் பெற மறுத்து விட்ட பரதனின் உயர்ந்த பண்பினைப் போற்றி அப்பாலையில் நிற்கும் பட்டமரங்கள் எல்லாம் கூட இலைகள் துளிர்த்துச் செழிக்கத் தொடங் குகின்றன என்று வர்ணிப்பது மிக நயமாக உள்ளது.

''பெருகிய செல்வநீ பிடிஎன் றாள்வயின்
திருகிய சீற்றத்தாற் செம்மையாய் நிறம்
கருகிய அண்ணலைக் கண்டு காதலின்
உருகிய தளிர்த்தன உலவை யீட்டமே''.

இவ்வாறு மருதமென பாலையும் மாறி நலஞ் செய்ய பரதன் தன் அளவிலாத சேனையுடனும் பரிவாரங்களுடனும் சித்திரகூடத்திற்கு வந்து சேர்கிறான். பரதனின் பெருஞ் சேனை சித்திரகூடம் வருவதை இளையபெருமாள் ஆன இலக்குவனும் விண்ணைமுட்ட எழுந்த தூளிப் படலத்தாலும், கடலொலியென எழுந்த பேராரவாரத்தாலும் உணர்ந்து கொண்டுவிடுகிறான். முன்பு குகனுக்குப் பரதன்மேல் உண்டான ஐயம் போலவே இப்பொழுது இலக்குவனுக்கும் அளவிலாத சேனையைக் கண்டதும் ஐயமே உண்டாகிறது. தாயின் வரத்தால் தனக்குக் கிடைத்த அரசுரிமை, பதினான்னான்கு ஆண்டுகளுக்குப் பிறகு பறிபோய்விடக் கூடும் என்ற அச்சம் காரணமாகவே அளவிலாத சேனையோடு பரதன் இராமர்மேல் போர் தொடுக்க வருகிறான் என்றுபிழைபடஉணர்ந்து கொண்டுவிடும் இலக்குவன் கோபம் கொண்டு கொதிக்கிறான். தான் நின்றிருக்கும் குன்று பொடிபடும்படியாக கோபத்துடன் அதை மிதித்துத் தரைக்குத் தாவிக் குதிக்கிறான். பர்ணசாலையருகே வீற்றிருக்கும் இராமரிடம் விரைவாக வந்து ''பரதன் போருக்கு வருகிறான் பெரும்படையோடு'' என்று கூறி இராமருடைய பதிலையும் எதிர்பாராதவனாய் வீரக் கழல்களைக் காலிலும், உடைவாளுடன் அம்பறாத் தூணியை இடையிலும் கவசத்தை மார்பிலும் தரித்துக் கொண்டவனாய், கட்டமைந்த வில்லையும் கையில் ஏந்திக்கொண்டு போருக்குத் தயாராகிவிடுகிறான் இலக்குவன்.

''பரதன் படையெடுத்து வந்ததால் இம்மை, மறுமையெனும் இரண்டு பேறுகளையும் அவன் இழந்துவிட்டான். அளவிலாத அவன் படைகளை நான் ஒருவனே நீறுபடுத்துவேன். அளவிலாத அவன் யானைகளையும், குதிரைகளையும் கொன்று, இரத்தப் பேராறு பெருக்கெடுத்தோடும்படி செய்வேன். நான் கொன்று குவிக்கும் வீரர்களின் கைகளையும், கால்களையும் பிய்த்துக் கடித்தவாறு, அவர்களின் கேடயங்களைக் கொண்டு தாளமும் போட்டு, தேர்கள் தோறும் நின்று இனிப் பேய்களே கூத்தாடும். நிலமகள் இவர்களின் பாரம் நீங்கி இளைப்பாறுவாள்; விண்மகள் இவர்களின் பாரம் ஆற்றேன் ஆற்றேன் எனக் கூறி முதுகு நெளிந்திடுவாள். உனைக் காட்டிற்கு விரட்டி மகிழ்ச்சிக் கூத்தாடிய கொடிய கைகேயி இனிக் கதறிக் கண்ணீர் விடும்படியாக பரதனையும் நான் கொல்லாமல் விடமாட்டேன். பரதசத்ருக்கனர்களின் மார்பினைக் கிழித்து அவர்கள் உயிரினைப் பறித்து, கழுகுகள் உண்டு மகிழும் வண்ணம் சதையினைக் கவ்வி நான் விடும் கணைகள் சீறி இப்போது பாயப் போவதை நீயே உன் கண்களால் பார்'' என்று இராமரிடம் கூறி திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் போல கோபத்தால் கொதித்து கூத்தாடுகின்றான் இலக்குவன்.

ஆவேசம் பொங்க இலக்குவன் கூறிய அனைத்தையும் புன்னகை மாறாத திருமுகத்தோடு செவிமடுத்துக் கொண்ட இராமபிரான் சாந்தமோடு அவனுக்கு அறவுரை பகர்கின்றார்; ''இலக்குவனா! நீ சீறியெழுந்தால் பதினான்கு உலகங்களும் நீறாகிவிடும் என்பதில் எனக்கு ஐயம் ஒன்றும் இல்லை. எனினும் நான் கூறுவதை அறிவுடன் நீ கேட்டால் உன் கோபம் தவறானது என்பது உனக்கே புலப்படும். நம் சூரிய குலத்தில் தோன்றிய அளவிலாத அரசர்களில் எவரும் இதுகாறும் அறநெறிக்கு மாறாக நடந்ததே இல்லை. அதிலும் வேதங்கள் வகுத்துக் காட்டியுள்ள தலையாய ஒழுக்கநெறிகளில் ஒரு சிறிதும் மாறுபடாதவன் நம் பரதன். பரதன் இப்போது பெரும்படையோடு இங்கு வருவதற்குக் காரணம், எனைக் காணும் பாசமே அன்றி வேறு எதுவும் இல்லை. இராச்சியத்தை என்னிடம் கொடுப்பதற்காக பரதன் வருகிறானே அல்லாமல் அவன் என்னிடம் போர் தொடுப்பதற்காக வரவில்லை. தருமமே வடிவான பரதனை, நேர்மையின் அச்சாணியே ஆன பரதனை நீ தவறுபட எண்ணுவதும் பாவமேயாகும். பரதன் எனைக் காணவும், இராச்சியத்தை என்னிடம் திரும்பத் தரவுமே வந்துள்ளான் என்பதை நீயே இப்போது உன் கண்களால் காணப் போகிறாய்'' என்று இலக்குவனின் அறியாமையை அவனுக்கு அன்புடனே சுட்டிக் காட்டுகிறார் அனைத்தையும் அறிந்துகொண்டிருக்கும் பரம்பொருளான இராமபிரான்.

''இலக்குவ! உலகம் ஓரேழும் ஏழும்நீ
கலக்குவன் என்பது கருதினால் அது
விலக்குவது அரிதது விளம்பல் வேண்டுமோ?
புலக்குரித் தொருபொருள் புகலக் கேட்டியரல்''

''பெருமகன் என்வயிற் பிறந்த காதலின்
வருமென நினைகையும் மண்ணைஎன்வயின்
தருமென நினைகையும் தவிரத்தானையால்
பொருமென நினைகையும் புலமைப்பாலதோ?'

''சேனுயர் தருமத்தின் தேவை, செம்மையின்
ஆணியை அன்னது நினைக்க லாகுமோ?
பூணியன் மொய்ம்பினாய் போந்தது ஈண்டெனைக்
காணிய நீ இது பின்னும் காண்டியால்''

சித்திரகூடம் வந்து சேர்ந்துவிடும் பரதன் அளவிலாத சேனைக் கடலைச் சற்றுத் தள்ளியே நிற்கக் கூறி இராமர் இருக்கும் இடத்திற்குத் தம்பி சத்ருக்கனனுடன் தனியே வந்து வணங்குகிறான். துயரென்பதன் வடிவம் இப்படித்தான் இருக்குமோ என்று கூறுமாறு அழுதழுது பொலிவிழந்த கண்களுடனும், தளர்ந்த உடலுடனும், இராமரை நோக்கித் தலைக்கு மேல் உயரே கூப்பிய கரங்களோடும், வந்து தொழுதவாறும், பாசத்தால் பொங்கி அழுதவாறும் நிற்கும் பரதனை முடிமுதல் தாள் வரையும் உற்று நோக்கும் இராமபிரான் ''இலக்குவனா! பரதனின் போர்ப்பெருங் கோலம் எப்

படியுள்ளது தான்'' என்று கூற இலக்குவனும் பரதனின் தவக்கோலத்தைக் கண்டு தன் தவறை உணர்கிறான். இலக்குவனின் கையிலிருந்து வில் தானாக நழுவி கீழே விழுகிறது.

இராச்சியலட்சுமி தன் நாதனான இராமரிடம் தனை மீளவும் ஆளக்கேட்டு அனுப்பிய தூதுவனாக வந்திருக்கும் பரதன் இராமரின் திருவடிகளைப் பற்றிக்கொண்டு கண்ணீரைப் பெருக்குகிறான். ''ஐயனே! இது தகுமா? முறைமை கொன்று முடி கவர்ந்த பழியுடன் உமைக் காட்டிற்கு விரட்டிய பெரும் பழியும் அல்லவா என் மேல் சுமத்தப் பெறுகிறது! நான் அதைத் தாங்கிடுவேனா?'' என்று கேளாமல் கேட்டவாறு ''எனக்கு எல்லாமே உன் பாதம் தான்'' என்பது போல் இராமரின் திருவடிகளைப் பற்றிக் கொண்டு தன் உயிரும் உடலும் ஒடுங்கக் கலங்குகின்றான். இராமர் பரதனை வாரி அணைத்து அவன் கண்ணீரைத் துடைத்து மார்புடன் சேர்த்து ''அஞ்சேல்! யாமிருக்க பயமேன்?'' என்று பரதன் கலக்கம் தீர்ப்பதைப் போல் அவனைக் கட்டித் தழுவிக் கொள்கிறார். நியாயங்கள் அனைத்திற்கும் தலைவனும், கருணாநிதியுமாகிய கடவுள், தருமதேவதையைத் தழுவி அணைப்பது போன்றது இக்காட்சி என்று கவிச்சக்கரவர்த்தி கம்பர் வர்ணித்து,

''அயாவுயிர்த் தழுகணிர் அருவி மார்பிடை
உயாவுறத் திருவுளம் உருகப் புல்லினான்
நியாயம் அத்தனைக்குமோர் நிலையம் ஆயினான்
தயாமுதல் அறத்தினைத் தழுவி என்னவே''

என்று பாடியிருப்பது மிக நயமான பாடலாகும்.

பரதனின் தவக்கோலத்தையும், முகக் கோலத்தையும் பலமுறையும் உற்றுநோக்கும் இராமர், தந்தை தசரதருக்கு ஒரு கொடிய துயரம் நேர்ந்துவிட்டிருக்குமோ என்று அஞ்சியவராய் ''தந்தையார் நலமாகத் தானே இருக்கிறார்!'' என்று வினவுகிறார். ''ஐய! உன் பிரிவெனும் பிணியும், தாயின் வரமெனும் எமனும் சேர, சத்தியத்தை நிலைநிறுத்தித் தந்தை வானுலகம் சேர்ந்து விட்டார்'' என்று பரதன் கூறுகிறான்.

''அரியவன் உரைசெயப் பரதன் ஐயநிற்
பிரிவெனும் பிணியினால் என்னைப்பெற்றஅக்
கரியவள் வரமெனுங் காலனாற் தனக்கு
உரியமெய்ந் நிறுவிப்போய்உம்பரான்என்றான்''

''தந்தை வானகம் சென்றார்'' என்று கேட்பதும் தம் கண்களும் மனமும் காற்றாடி போல் சுழல ''ஆ தந்தையே!'' என்று அலறியவாறு மயங்கித் தரையில் சாய்ந்து விடுகிறார் இராமபிரான்.

(தொடரும்)

# நூல் அறிமுகம்

**நிறைமதி**

நூல்பெயர்: திருக்குறள் வாழ்வியல் உரை,

நூலாசிரியர்: மதுரை இளங்குமரன்,

வெளியீடு: குறளாயம்,
3, மண்டப வீதி,
ஈரோடு.- 638001.

விலை ரூ: 30. பக்கம்: 288

திருக்குறள் தமிழில் தோன்றிய நூல். தமிழ் நெறியில் தோய்ந்து முழுதுற ஆய்ந்த பேராசிரியப் பெருமகனாரால் செய்யப்பட்ட நூல். நூலோர் தொகுத்தவற்றையெல்லாம் மெய்ப்பொருள் இவையெனக் காட்டிய நூல். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து காட்டிய, பெருமகனாரால் வாழ்வார்க்கு வழிகாட்டியாய் வகுக்கப்பட்ட நூல். தமிழர் நெறிப் பாதுகாப்பாக என்றும் எங்கும் பயன்படும் வகையில் உலகப் பெருநோக்கில் இயற்றப்பட்ட உலகப் பொதுமறையாம் நூல், இத்தகு உலகப் பொது மறையாம் திருக்குறளுக்கு இறைமைக் கொள்கைக்கு வழிகாட்டுவதாகவும் வாழ்வியலுக்கு உரியதாகவும் பெருந்தமிழ்ப் புலமை மிக்க மதுரை இளங்குமரனார் வாழ்வியலுரை வழங்கி உள்ளார். குறளாயக் காவலர், பெருந்தகை ஈரோடு வேலா இப்பயன்மிகு நூலை வெளியிட்டுள்ளார். அனைவரும் படித்துப் பயிலத்தக்க சிறந்தநூல்.

நூல் பெயர்: ஈரோடு வேலா வரலாறு


நூலாசிரியர்: மதுரை இளங்குமரனார்

வெளியீடு: குறளாயம்,
3, மண்டப வீதி,
ஈரோடு - 638001.

விலை: ரூ. 30. பக்கம் 304

திருக்குறள் நம் மறை-நெறி என்று வாழ்வதோடு திருக்குறள் கொள்கையை நடைமுறைப்படுத்தி காட்டுவதற்கே வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து கொண்டிருப்பவர் குறளியம் இதழாசிரியர் வேலா. வீரசைவ சமய வரலாற்றையும், சமயஉலகில் இதன் பெருஞ்சிறப்பினையும் கூட இந்நூல் இனிதினில் இயம்புகிறது. ''என்கடன் பணிசெய்து கிடப்பதுவே'' என்ற அருளாளர் அப்பர் தொண்டு நெறியினைச் செப்பும் நூல். அனைவரும் கற்றுப் பயன்பெற வேண்டிய சிறந்த வழிகாட்டி நூல்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A.,Ph.D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.




திருச்சோபுரம் அருள்மிகு திருச்சோபுரநாத சுவாமித் திருக்கோயில் திருப்பணியை மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு கே. பி. கந்தசாமி, எம்.ஏ., அவர்கள் 30.11.90 அன்று ஆரம்பித்து வைத்தார்கள். அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு வ. ராமதாஸ், ஐ.ஏ.எஸ். அவர்கள் இவ்விழாவிற்குத் தலைமை தாங்கினார்கள். நாடாளுமன்ற உறுப்பினர் திரு வள்ளல்பெருமான், குறிஞ்சிப்பாடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. நா. கணேசமூர்த்தி உடன் உள்ளனர்.